ஜனா [illegible]யம்.
V.7. No. 26. 5.7.1934.

M211,N28K.N
N34.7.26.
199176

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

27 OCT 1934

Vol 7.] 1934 ௵ ஜூலை ௴ 5௳ [No. 26

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 401
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—களன் தூதுப் படலம். 403
3. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, &
ஆஷாதேவி M. A. 405
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 407
5. சில ஐயம் (கம்பரும் வான்மீகியும்)
P. இராமாநுஜன் 408
6. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 4, களம் 1)
Goldsmith's—"She stoops to Conquer" 410
7. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 411
8. மலர்வனம்—மாலையுங் காலையோ "மதுகரம்" 414
9. மதுரைக்கோவை
(மணவணி, இல்லிருத்தல், மணச்சிறப்பு)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 415
10. வர்த்தமானம் 416

கலாநிலயம்

கல்சரை யடையும் வகை 3

'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய' புலமைசால் கவிவரர் அருளிய நூல்களே இலக்கியங்கள் ஆகும். அவர்தாம் கல்சருக்குக் கைதரவல்லவர். இன்னதோர் பெருமை வாய்ந்த இலக்கியங்களையும், இலக்கியச் சுவைநிரம்பிய தமதுள்ளத்தில் மேலோர் மொழிகளின் மெய்ப்பொருள் ஊடாடுமறிவுடையோர் அவ்விலக்கியங்களை அளந்துகாட்டிவரைந்துதவுகின்றவிளக்க நூல்களையுந் தவிர மற்றப் புத்தகங்கள் எவையும் முதலிடம்பெறுதற் கியைந்தன வாகா. தோன்றாத் துணையாயிருந்து, கதையென்றும் பாட்டென்றும் விளையாட்டாய் நம் மனத்துள் கல்சரெனுங் கற்பகத்தருக்களை இவ்விலக்கியங்கள் வளர்த்துத்தந்தபின், அதன் கனியென்னப் பழுக்கும் கொள்கைகள் செம்மையன வென்றுஒப்பு நோக்கித் தேர்வதற்குச் சரித்திரம் சாத்திரம் அனைய நூல்கள் பயன்படுமேயல்லாமல் இப்பின்னவைகளைத் தனித்துப் பயில்வதால் நீதொழிய நலமில்லை. நீரிற்பிறந்து நீரிலேவளருமாயினும் தாமரைக்கு வேரில்லையேல் அது தானுமழுகித் தண்ணீரையுங் கெடுத்துவிடும்.

ஈதுணராமல், பெரும்பாலோர் கண்டகண்ட புத்தகங்களை வாங்கி வாசிப்பதால், தம் கண்ணின் ஒளியையும் கைப்பொருளையும் காலத்தையும் மதியின் திட்பத்தையும் வீணே கெடுத்துக்கொள்கின்றனர். இதனினும் வருந்தத்தக்க நிலை வேறொன்றில்லை. புத்தியைச் செலுத்தி ஒன்றினைப் படிப்பதென்னும் பழக்கமே போய்விடுகின்றது. வர்த்தமானப்பத்திரிகைகள் வரம்பிலாடில் விழுங்கிவரும், கொலை களவு வஞ்சனை பகை விபசாரம் வீண்வழக்கு பயனிலாச்சொற்கள் இவைகளை மேலெழுந்தபடியே பார்த்துப் போவதல்லாமல், கருத்தூன்றி ஒரு நூலை ஓதுவதென்றால் பாரம்பெரிதென்று திகைக்கின்ற நொய்ம்மையர்களாகிவிடுகின்றனர். உலகப்போக்கு இவ்வகை இருக்கின்றதென்று உணர்த்துமளவில் வர்த்தமானப் பத்திரிகைகள் ஒரு சிறிது உதவலாம். ஆனால்,விடயங்களை ஆய்ந்தோய்ந்து மதிக்கவல்ல கல்சர்நிலை எய்தியிருப்பவர்கள்தாம் உலகப்போக்கின் உண்மையை உணர்ந்து தம் அறிவைச் சிறிது விசாலப்படுத்திக்கொள்ளக்கூடியவர் ஆகின்றனர். ஏனையோர் வர்த்தமானப் பத்திரிகைகளை மாத்திரம் விடாதுபடித்துக்கொண்டுவருவதால் சிற்சிலதீமைகள் நேரினும் நேரலாம். இக்காலம், படிக்கத் தெரிந்தவர்களில், நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பதின்மர் கையில் வர்த்தமானப்பத்திரிகை தவிர வாசிப்பதற்கு வேறொன்றும் வாய்க்காததை எங்குங் கண்டுவருகின்றோம். தமிழைத் தாய்ப்பாஷையாக உடையவர்களும் ஆங்கிலமொழி அறிந்துகொண்டவர்களும், வர்த்தமானப் பத்திரிகைகளும், அப்பத்திரிகையில் தனித்தனி வந்துள்ள பாதகச் செய்திகளையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி எழுதப்பெறுகின்ற 'நாவலென்ற' சில அற்பப் புத்தகங்களும் படித்துப் படித்துத் தமக்குஇயற்கையாயுள்ள கல்சரம்சங்களைச் சிறிதுசிறிதாக வதைத்துக்கொள்வதைக் காணுங்கால் பொதுநலம் விழையும் நல்லறிவுடையோர் எவரும் கண்ணீர் வடிப்பார். அமெரிக்காவில் அறுபதுஆண்டுகளுக்குமுன் னிருந்த ரால்ப் வால்டோ எமர்ஸன் என்ற வித்தகர், வர்த்தமானப் பத்திரிகைகளால் ஜனங்கள் வீண்காலம் போக்கும்படி ஆயிற்றேஎன்று நெடிதே உயிர்த்துரைத்தார்.

இங்கிலாந்திலும் ரஸ்க்கின் என்ற புலமைசால் பெரியோர் வர்த்தமானப் பத்திரிகைகளை ஓதாது ஒழித்தனர். குணம் நாடிக் குற்றமும் நாடி, ஆசையும் அச்சமும் இன்றி இயம்புங்கால் வர்த்தமானப் பத்திரிகைகளைப் போதுஜனங்கள் படிப்பதால் பற்பலதீமைகள் பரவுதற் கையமில்லை என்னவே வேண்டிவருகின்றது.

உள்ளத்திற்கு உறுதிபயக்கவல்ல நல்ல நூல்களைப் படிக்கவேண்டிய நேரத்தைக் கவர்ந்துவிடுவதும், ஒன்றினைஊன்றிப்படிக்கும்பழக்கத்தைச் சிதைத்துவருவதும் மாத்திரமல்லாமல், வர்த்தமானப்பத்திரிகைகள் பின்னுஞ் சிலவகைகளில் கல்சரின்வளர்ச்சிக்குஇடையூறாய் உலவுகின்றன. தீயார்குணங்களைத்தேடித்தேடி உரைப்பதோடு கேட்பதுந் தீது. படுகொலை, குதிரைப்பந்தயம், பெருமோசம், விபசாரிகளின்செய்கை, இவைகளே பெரிதும் விரவியில்லையாயின் வர்த்தமானப் பத்திரிகைகள் விலையாவதில்லை. ஆகையாற்றான் வர்த்தகயுக்தியால் இத்தகையகொடுமைகளைத் திரட்டித்தரவேண்டியிருக்கின்றது. ஆதலின், மாநுடக்கொடுமையின் இத்தகைய சரித்திரங்கள் அல்லாமல் பெரும்பாலோர்மனத்திற்கு நல்லுணவு வேறு வாய்ப்பதில்லை. மனிதர்தம் எண்ணங்கள், அவர் நினைத்துநினைத்துப் பழகிவருகின்ற குணம் பொருள் முதலியவைகளின் நிறத்தையே பெறலாகின்றனவென்பது நமது அனுபவமுடன் மானதசாத்திரத்தின் கொள்கையும் ஆகும். பொய்யும் குறளையும் பயனிலாச்சொற்களும் களவும் வஞ்சனையும் சூதும் கள்ளும் காமமும் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதரிடத்தில் கண்டு பழகுவது போதாதென்றே உலகமடங்கலும் பொல்லாங்கு எத்துணை நிகழ்கின்றதென்பதை நமக்கு அளர்ந்து காட்டி அறிமுகம் செய்துவைக்கவேண்டும்! இதன்படி, மாநுட இனத்திற்கோர் மேன்மை யுளதென்னும் நம்பிக்கையே இல்லாமற் போவதற்கும் இடமுளது. இந்த நம்பிக்கை இழந்தபின் எவ்வித நலமும் யாருக்கும் வந்தெய்த வழியில்லை.

பொதுநல மேன்மைகள் வளர்ந்தோங்குவதற்கு நிலைக்களமாகிய இந்நம்பிக்கை நீங்குவதுமல்லாமல், கல்சர் கைவருவதற்குரிய இயற்கைஅம்சங்களாய் யாவரிடத்தும் இருக்கும் தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலியவைகளும் தலையெடுக்கவொட்டாமல் செய்யக்கூடியனவாய் வர்த்தமானப்பத்திரிகைகள் அமைந்திருக்கின்றன. மதக்கொள்கை சார்பான புராணங்களையும் வேதங்களையும் பழித்து நாத்திகத்தை நாட்டுவதே கருமமென விளம்பி நடைபெறுகின்றபத்திரிகைகளால் பார்க்குமிடத்துப் பெரிதும் ஆபத்தொன்றுமில்லை. இவை, கடவுள் இல்லையென்றேனும் இழிந்ததென்றேனும் எடுத்துக்காட்டுவதன் பொருட்டு அக்கடவுள்நினைவை விடாமல் எழுப்பிக்கொண்டிருக்கின்றனவாதலால், தீங்குபோல் அவை சொல்வன செய்வன வெல்லாம் இறுதியில் நன்மையாகவே முடியும் என்று எண்ணுகின்றோம். கடவுளை மறுப்பதற்கும் நிந்திப்பதற்கும் அக்கடவுளை நினைக்கத்தான்வேண்டும். கடவுளை யொருபோதும் நினையாமலிருப்பதினும் நிந்திப்பதற்கென்றேனும் ஒவ்வோர்வேளை நினைப்பது நல்லதே. இரணியனைப்போல் கடவுளை மறந்தும், கம்சனைப்போல் கொல்லமுயன்றும், சிசுபாலனைப்போல் இகழ்ந்தும் உய்வார் சிலர் இலராகார். மற்ற, ஒருபோதும் கடவுளை நினையாதார்க்கே உய்யும்நாள் ஒருநாளுமில்லை. ஆதலின், நாத்திகத்தின் சார்பாக நடத்தப்பெறுன்ற சிற்சிலபத்திரிகைகள்கிடக்க, ஏனைய வர்த்தமானப்பத்திரிகைகளோ, பெரும்பாலும், கடவுள் நினைவென்பதே பொதுஜன மனதில் தங்கிப் பயிலாவண்ணம் செய்கின்றன. இது, அவைகளால் விளையும் முடிவென்று கூறுகின்றோமேயல்லாமல் இதுவேதான் அவைகளதுநோக்கம் என்று நாம் இயம்பவரவில்லை. அரசியல் வாதங்களிலும், கட்சிக்குழப்பங்களிலும், வர்த்தக கைத்தொழில் ஆசைகளிலும் ஒன்றிற்கு முதவாத வீண் வம்பிலும் பொதுஜனங்களின் கவனத்தை யெல்லாஞ் செலுத்திவைக்கவே, இவைகளிற்றான் தம்முடைய வாழ்க்கை அடங்கிவிட்டதாக முற்றிலும் விவகரிக்க வர்த்தமானப் பத்திரிகைகள் பழக்கிவைப்பதால் கடவுள்நினைவிற்கு இடமென்பதே எங்கும் இல்லாமற் போகின்றது. முன் 'இந்தியா குடியேற்ற நாட்டு உரிமைகளை அடைவதே' தம் நோக்கம் என்று வைஸராய் லார்ட்இர்வின் செய்ததோர் விளம்பரத்தைச் சூழ்ந்து, லண்டன் நடுவாக இங்கிலாந்து முழுவதும் டெல்லிமுதல் இந்தியாமுழுவதும், எத்துணைப் பரபரப்பு ஏற்பட்டிருந்ததென்பதை யாவரும் அறிவார். "இனியென், இனியென்!" என அவ்வார்த்தைகளை ஏற்பார்சிலர். "இதனுலென்' இதனுலென்!' என மறுப்பார்சிலர். "ஏனிது ஏனிது', என்று சினங்கொள்ளுவார் பலர். "இதுஎன், 1917-வதுவருடத்திய விளம்பரத்தின்விரித்தியோ, வேறோர் நன்கொடையோ," என்று வினவுவார்ஒருபுறம். "பால்ட்வின், கருத்தென்ன, ஸர் ஜான் ஸைமனின் கருத்தென்ன! நம் நாட்டுத் தலைவர்கள் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் யாது கூறினர்!" என்று விரைந்து நோக்குவார் மறுபுறம். இன்னவைகளினிடையே, "கடவுளின்கருத்து என்னவென்றேனும், இதனுல் யாருக்கு என்னவாயிற்றென்றேனும்" எண்ணுதற்கு நேரமேது; எண்ணவேண்டு மென்ற நினைவேது! அரசியல்முறைகளுக்கும், மனிதர்தம் தனித்தனி சுகத்திற்கும்துக்கத்திற்கும், உயர்விற்கும்தாழ்விற்கும், ஆங்கிலஅறிவாளி டாக்டர் ஜான்ஸன் இயம்பியபடி, என்ன சம்பந்தம் இருக்கின்றது! கடவுளை முன்னேவைத்து நோக்கினுற்றான் இச் சம்பந்தமின்மை தெரியவரும். அவ்வகை நோக்கும் பழக்கம் கைகூடாவண்ணம் பத்திரிகைகள் ஆரவாரங்கள்செய்து அழித்துவிடுகின்றன. குழந்தைகள் தம்பட்டமும் ஊதலும் வேண்டுமென்று அழுகின்றன. அவை யில்லாதவாழ்க்கை என்னவாழ்க்கை என்று எண்ணுகின்றன. "தம்பட்டம் அடிக்காத கை என்ன கையோ! ஊதல் ஊதாதவாய் என்னவாயோ!" என்று குழந்தைகள் பற்பல சூழ்ச்சிகளால் முயல்வதும், தம்பட்டமும் ஊதலும் இவைகளுக்குக்கொடுக்கலாமோ கூடாதோ, அல்லது, பெரியவரென்று தம்மை நினைத்துக்கொண்டிருப்பார்கள்தாம் தம்பட்டம் அடித்தும் ஊதல் ஊதியும் அக் குழந்தைகளுக்குக் காட்டுவது முறையோ என்று விவகரிப்பதற்கும் இவ்வாதங்களுக்கும் பெரிதுபேதமில்லை. இன்னபடி நமது கவனமடங்கலும் புறவுலகவிடயங்களே அடர்வதால் தெய்வசிந்தனை வளர்வது இயலாததாகின்றது. இதனுல் நாம் மறுமையை நினைத்து இம்மைக்குரியன செய்யாமல் யாவரும் துறவிகளாகவேண்டுமென்று உரைக்கவந்திலம். கார்லைல், எமர்ஸன், மாத்யூ ஆர்னல்ட், முதலான பேரறிவுடைய சான்[illegible] இம்

m211,N28εN
199176

மைக்கும் இவைகளாற் பயனில்லை, யாவரும் இதுவரையில் உண்மைபான இம்மைப்பயனை அடைந்ததும் இல்லை, என்பதையே இங்கு நினைப்பூட்டுகின்றோமே யன்றி வேறன்று. வர்த்தமானப் பத்திரிகைகளின் நோக்கம் இவ்விதம் கல்சருக்கு இடையூறாகஇருக்கவேண்டுமென்பது அன்றாயினும் முடிவு அன்னதாக ஏற்படுவதனுல் அதனை இங்கு எடுத்துக் காட்டவேண்டியது எம்கடமை ஆகின்றது. நல்ல நூல்களைப் படித்து உய்யவேண்டிய நேரத்தை வர்த்தமானப் பத்திரிகைகள் கவர்ந்துகொள்வதுமன்றிச் சுயகல்சருக்குரிய தெய்வசிந்தனைக்கு அவை எதிருற நடப்பதுபோன்றே, தருமசிந்தனை பகுத்தறிவு என்னும் மற்றிரு அம்சங்களது வளர்ச்சிக்கும் மாறாக நடக்கின்ற தன்மையைப் பிற்றைநாள் ஆராய்வோம்.

தமிழ்ப்பாடம் 126.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[388-வது பக்கத் தொடர்ச்சி]

வடமொழியில் ஸ்ரீ ஹர்ஷகவி யெழுதிய நைஷதம் என்னுஞ் சிறந்த காவியமே தனக்கு முதனூலாக, அரசர்பெருமான் அதிவீரராமபாண்டியன் தமிழிற் பாடிய நைடதமாம் இந்நூல் நளனது திவ்விய சரித்திரத்தைத் தன்னுட்கொண்டு திகழ்கின்றது. இச்சரித்திரமே அனமந்துள்ள புகழேந்திப் புலவரது கருதரிய பொருமைவாய்ந்த வெண்பாக்களை இத் தமிழ்ப்பாடமென்னும்பகுதியின்வாயிலாக முற்றும்முன் கற்றிருக்கின்றோமாயினும், தேவர்தம் வேண்டுகோளிற் கிணங்கித் தமயந்தியின்பால் நளவேந்தன் மணத்தூது சென்றபாகம் "நளவெண்பா" வில் மிகவுஞ் சுருக்கமாக வரையப்பெற்றிருக்க, அதனை அதிவீரராம பாண்டியன் அகல உரைத்திருப்பதால் இப்படலத்தைப் பாடத்திற் கெடுத்துக்கொள்ளலானோம். ஓசைச்சுவையும் பொருள்நயமும் மிகவுடைய இப்படலம் நைடதத்தினுள் அருமையாய்ப் பாராட்டற்குரியது. பாடமாயோதுவோர்க்குப் பயன்மிக அளிப்பதன்றி ஏனையோர்க்கு மிப்படலம் பெருமகிழ்வளிக்கும் என்பதி லையமில்லை.

அன்னமுரை செய்தவெழி லாயிழைபை நெஞ்சத்
துன்னியயர் வோடுமுயி ருண்டிலைகொ லென்னக்
கன்னன்மத னைங்கணை கருத்திடை குளிப்ப
மன்னவர்கண் மன்னன்மதி மாழ்கியயர் காலை. 1

(உரை):—அன்னம் - தூதுவந்த அன்னப்பறவை, உரைசெய்த - சொன்ன, எழில் - அழகுபொருந்திய, ஆய்இழையை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த தமயந்தியை, நெஞ்சத்து - மனதில், உன்னி-நினைத்து, அயர்வோடும் - சோர்வுடன், உயிர் - உயிரானது, உண்டு இலை கொல் என்ன - உண்டோ இல்லையோ என்னும்படி, கன்னல் - கரும்புவில்லையுடைய, மதன் - மன்மதனுடைய, ஐங்கணை - ஐந்து மலர் அம்புகளும், கருத்திடை - கருத்தினுள், குளிப்ப-தைப்பதால், மன்னவர்கள் மன்னன் - அரசருக்கு அரசனான நளன், மதிமாழ்கி - அறிவு கலங்கி, அயர்காலை - அயர்ந்திருந்த சமயத்தில்—

குறிப்பு:—மெய்முன் உயிர், உயிர்முன் உயிர் உயிர்முன் மெய், குற்றியலுகரங்களுக்குமுன் உயிர் அல்லது மெய்; ஆகிய இவைகள் புணர்வதற்குரிய விதிகள் இதுவரையில் இங்குக் கூறி முடிந்திருக்கின்றன. இனி, மெய்முன் மெய் வந்து புணர்கின்ற விதிகளைக் கூறுவோம். அதற்கிடையில், இப்பாடங்களின் வழிபற்றித் தமிழைக் கற்றுவருவோர், செய்யுள்தோறும் சொற்கள் புணர்ந்திருக்கும்விதங்களை ஆராய்ந்து இதுகாறும் உரைத்துள இலக்கண விதிகளைத் தெளிந்து கொள்ளுதல் நல்லபயிற்சியாகும். நாமும் ஆங்காங்குச் சில செய்யுள்களுக்கு இவ்விலக்கணம் இயம்பிக் காட்டுவோம்.

அன்னம் + உரைசெய்த— ம் என்னும் மெய்யிற்கு முன் உகரஉயிர் வந்திருப்பதால், அவ்வுயிர்மெய்யின்மே லேறி 'மு' என்னும் உயிர்மெய்யாகிப் புணர்ந்து, அன்னமுரை செய்த, என்று ஆயிற்று (வால் 6, பக்கம் 575)

உரைசெய்த + எழில்—நிலைமொழியினிறுதியில் அகர உயிர்நிற்க, வருமொழிமுதலின்கண் உயிர் வந்தால், வகர உடன்படுமெய் தோன்ற அம்மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறி (செய்த + வ் + எழில்) 'செய்தவெழில்' என்று புணர்ந்தது (6-715)

எழில் + ஆய்—வருமொழிமுதல் உயிர் நிலைமொழியீற்று மெய்யின்மே லேறி உயிர்மெய்யாகி, 'எழிலாய்' எனப் புணர்ந்தது—(6-575)

ஆய் + இழையை = ஆயிழையை— முன்னின்ற மெய்யின் மேல் வருமொழிமுதல் உயிர் ஏறி ஆயிழை என்றாயிற்று; இழை என்பதோடு ஐ என்னும் இரண்டாம்வேற்றுமை உருபு, யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது (6-715)

இழையை + நெஞ்சத்து = இழையைநெஞ்சத்து — உயிரீற்றிற்குமுன் மெல்லினமெய் வர யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது-(7-69)

நெஞ்சத்து + உன்னி = நெஞ்சத்துன்னி - குற்றியலுகாத்திற்குமுன் உயிர்வர, அக்குற்றியலுகரம் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறியது.—(6-859)

உன்னி + அயர்வோடும் = உன்னியயர்வோடும்-இகர உயிரிற்குமுன் உயிர்வர, யகர உடன்படுமெய் தோன்றியது.—(6-715)

அயர்வு + ஓடும் = அயர்வோடும் — வகரத்தின்மேல் ஏறிய உகரம் நிலைமொழி ஈற்றில் இருக்க, வருமொழிமுதலில் உயிர் வருதலும், அந்த ஈற்று உகரம் (குற்றியலுகரத்தைப்போல்) கெட்டுவிடவே, வருமொழிமுதல்உயிர் நின்ற மெய்யின் மேல் ஏறியது.—(6-828)

அயர்வோடும் + உயிர் = அயர்வோடுமுயிர் —உயிர் + உண்டு = உயிருண்டு— நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது.—(6-575)

உண்டு + இலை = உண்டிலை—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம்கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (6-828)

இலை + கொல் = இலைகொல் - இல்லை என்பதன் விகாரமாகிய இலை என்பது (குறிப்பு) வினைமுற்றாகையால், அதன் ஈற்றிலுள்ள உயிரிற்குப்பின் வருமொழி முதலிலுள்ள வல்லினமெய் மிகாமற் புணர்ந்தது.—(7-339)

கொல் + என்ன = கொலென்ன. நிலைமொழி யீற்றுமெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர்ஏறியது. கொல் என்பது குறிலொடு சேர்ந்த இரண்டெழுத்துச் சொல்லாயிருப்பதால், ஈற்றுமெய் இரண்டாகவிரிந்து ஒன்று அப்படியேநிற்க மற்றது வருமொழி முதல் உயிரை ஏற்றுக் "கொல்லென்ன" என ஆதல்வேண்டுமாயினும் (6—590) செய்யுளில் இங்கு அந்த லகரமெய் விரிந்துகெட்டது என்று கொள்ளவேண்டும்.

என்ன + கன்னல் = என்னக்கன்னல்-'என்ன,' 'என' எனும் அகர ஈற்று இடைச்சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்துபுணர்ந்தது.—(7-355)

கன்னல் + மதன் = கன்னன்மதன் —நிலைமொழி யீறு வருமொழிமுதல் ஈரிடத்தும் மெய்வந்து புணர்கின்ற விதிகள் இன்னும் கூறப்படவில்லை.

மதன் + ஐங்கணை = மதனைங்கணை--நிலைமொழியீற்றுமெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. —(6-575)

ஐந்து + கணை = ஐங்கணை-எண்ணுப்பெயர்கள் புணர்வதற்குரிய சிறப்பு விதிகளை நாம் கூறவில்லை. எனினும் இவை புணர்கின்ற விதங்களை அனைவரும் அநுபவபூர்வமாய் அறிந்திருப்பார்.

கணை + கருத்திடை = கணைகருத்திடை—எழுவாய்த்தொடராதலால், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாமல், நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது.—(7-131)

கருத்து + இடை = கருத்திடை—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட, வருமொழி இடையென்னும் ஏழனுருபின் முதலிலுள்ள உயிர், குற்றியலுகரங் கெட்டுநின்ற மெய்யின்மேல் ஏறியது. (6-828)

கருத்திடை + குளிப்ப = கருத்திடைகுளிப்ப - இடை என்னும் ஏழாம்வேற்றுமை உருபேற்ற சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய், ஒரு நியதியின்றி மிகுந்தும் மிகாமலும் நூலாசிரியர்களால் புணர்த்தப்படுகின்றது. இங்கு மிகவில்லை. (7-355)

குளிப்ப + மன்னவர்கள் = குளிப்பமன்னவர்கள்-நிலைமொழியீற்று உயிரிற்குப்பின் வருமொழி முதலில் மெல்லினமெய் வந்ததால் அம்மெய் இயல்பாய்ப் புணர்ந்தது. (7-69)

மன்னவர்கள் + மன்னன் = மன்னவர்கண் மன்னன்; மன்னன் + மதி = மன்னன் மதி—நிலைமொழியீற்றுமெய் வருமொழிமுதல் மெய்யோடு புணர்கின்ற விதிகள் இன்னுங் கூறப்படவில்லை.

மதி + மாழ்கி = மதிமாழ்கி—நிலைமொழியீற்று உயிரோடு வருமொழிமுதல் மெல்லினமெய் இயல்பாகப் புணர்ந்தது. (7-355)

மாழ்கி + அயர் = மாழ்கியயர் — நிலைமொழி யீற்றில் இகரஉயிர் இருப்பதால் வருமொழிமுதலுயிர் யகரஉடன்படுமெய்பெற்றுப்புணர்ந்தது(6-715)

அயர் + காலை = அயர்காலை — அயர்கின்ற என்னும் பெயரெச்சம் காலம்கரந்து வினைப்பகுதியளவில் அயர் என்று நிலைமொழியாய் நிற்பதால் இத்தொடர் வினைத்தொகை. ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.-(7-387)

குறிப்பு:—ஆயிழை, என்பதற்கு ஆய்ந்த ஆபரணம் என்பது பொருளாம். ஆய்ந்த என்னும் பெயரெச்சம் 'ஆய்' என்னக் காலம்கரந்து நிற்றலால் அது வினைத்தொகை. ஆனால், அதுமாத்திரமன்றி, அணிந்தவள், என்பது இறுதியிலும் தொக்கிருத்தலால் இத்தொடர் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

பூகமடல் கீறியிள வாளைபுனல் காலு
மேகமிசை தாவிடு விதர்ப்பநகர் மன்ன
னோகையொ டளித்தவுயி ரோவிய நிகர்க்குந்
தோகைமண வோலைகொடு தூதுவ ரடைந்தார். 2

(உரை):—இள வாளை-இளமைபொருந்திய வாளைமீன்கள், பூகம் - பாக்குமரத்தின், மடல்-பாளைகளை, கீறி - கீறிக்கொண்டு, புனல் - நீரை, காலும் - வீசுகின்ற, மேகமிசை - மேகத்தின்மீது, தாவிடும் - தாவுவதற்கிடமான, விதர்ப்பநகர் - விதர்ப்பநாட்டுத் தலைநகரமாகிய குண்டினபுரத்திற்கு, மன்னன் - மன்னனாகிய வீமராஜன், ஓகையொடு - மகிழ்ச்சியோடு, அளித்த - பெற்ற ஒரு, உயிர் ஓவியம் நிகர்க்கும் - உயிருள்ள சித்திரத்திற்கு ஒப்பான, தோகை - தமயந்தியின், மணவோலை கொடு - மணவோலையை எடுத்துக்கொண்டு, தூதுவர்-வீமராஜன் அனுப்பிய தூதர்கள், அடைந்தார் - நளனிடத்தில் வந்து சேர்ந்தனர்.

விரிவுரை:—முன்பாட்டினிறுதியில் நின்ற 'காலை' என்பதனை, இப்பாட்டினிறுதியிலுள்ள 'அடைந்தார்' என்பதோடு சேர்த்து, "நளன் அயர்ந்திருந்த சமயத்தில் வீமராஜனது தூதர் வந்து சேர்ந்தனர்" என்று பொருளை முடித்துக்கொள்ளவேண்டும். இப்படி ஒரு செய்யுள் அடுத்துவரும் செய்யுளிற்குள்ளும் தொடர்ந்தாலன்றிப் பொருள்முடிபு இல்லாமல் நிற்குமாயின் அவ்விரு செய்யுள்களையும் குளகம் என்பர்.

ஓவியம்நிகர்க்கும் தோகை, என்பது உவமையணி. ஆனால், வெறும் ஓவியம் என்னாது, உயிருள்ளஓவியம் ஒன்று உளதாயின் அதனை நிகர்க்கும் தோகை எனக் கூறப்பட்டிருக்கின்றது. உயிருள்ளஓவியமோ எங்கும் இல்லை; இல்லாத வொருபொருளை இருப்பதுபோல் உவமையாகக் கூறியிருத்தலால் இது, இல்பொருள் உவமை ஆகும். (5—843)

தோகை, என்னுஞ்சொல்லிற்கு மயிலின் சிறகு என்பது பொருள். அச் சிறகு மயிலின் ஒரு சினை (சினை - உறுப்பு) ஆகும். அச்சினையின் பெயர் அதனையுடைய மயிலிற்கே ஆனது சினையாகுபெயர். மறுபடி, மயிலென்னும் பொருளாய அத் தோகைஎன்னும் சொல் அந்த மயில்போன்று இருக்குங் காரணத்தால் ஒரு பெண்ணிற்கு ஆகி நிற்றலால் அது உவமை ஆகுபெயர் (5—306,823) இப்படி இருதரம் பொருள் மாறுதலடைந்து 'தோகை' என்னும் சொல் பெண்ணைக் குறிக்கலாயதால் இது இருமடியாகுபெயர் எனப்படும் (5—588)

குறிப்பு:—மேகமிசை + தாவிடும் = மேகமிசைதா

விடும் - இடை என்னும் ஏழாம்வேற்றுமை உருபைப்போல் மிசை என்னும் உருபிற்குப்பின்னும் வல்லினம் மிகுந்தும் மிகாமலும் புணர்கின்றது.

முடங்கலின் வரைந்தவுரை முற்றுமுண ராமுன்
தடம்புயம் வளர்ந்தன வரைக்குவமை சாலக்
குடங்கையி னகன்றவிழி கோநகரி செல்வான்
மடங்கலனை யானுள மகிழ்ச்சியொ டெழுந்தான். 3

(உரை)—முடங்கலின் - தூதுவர் கொணர்ந்த ஓலைச்சுருளில், வரைந்த உரை - எழுதியுள்ள சொற்களை, முற்றும் உணராமுன் - முழுவதும் படித்துத் தெரிந்துகொள்வதற்கு முன்னேயே, தடம்புயம் - நளனுடைய பெரிய தோள்கள், வரைக்கு - மலைக்கு, உவமைசால - உவமையாகும்படி, வளர்ந்தன-(மகிழ்ச்சியால்)பருத்தன. (உடனே) மடங்கல் அனையான் - சிங்கத்தைப்போன்ற நளன், குடங்கையின் - உள்ளங்கைபோன்ற, அகன்ற - அகன்றிருக்கின்ற, விழி - கண்களையுடைய தமயந்தியின், கோநகரி - இராஜநகரத்திற்கு, செல்வான் - போகும்பொருட்டு, உளம்மகிழ்ச்சியொடு - மனக்களிப்புடன், எழுந்தான் - புறப்பட்டான்.

குறிப்பு:—முடங்கல் என்பதற்கு வளைதல் அல்லது சுருளுதல் என்பது பொருள். இத் தொழிலின் பெயர் அத் தொழிலையுடைய ஓலைக்கு ஆயது. மடங்கல் என்றால் திரும்புதல். அது கம்பீரமாகத் திரும்புகின்ற தொழிலையுடைய சிங்கத்திற்குப் பெயராயது. ஆகையால் இவையிரண்டும் தொழிலாகுபெயர்கள்.

விழி, என்பது இங்கு விழிகளையுடைய தமயந்தி என்னும் பொருள் உடையது. விழி என்பது சினைப்பெயர். அந்தச் சினைப்பெயர் அதனை உடைய பொருளுக்கு ஆனதால், இதனைச் சினையாகுபெயர் என்னல் வேண்டும். ஆயினும், ஆகுபெயர் என்பது நினைத்தவர் நினைத்தபடி ஆக்கக்கூடியவொன்று அன்று; தொன்றுதொட்டு அப்பொருளில் அதுவழங்கிவருவதா யிருத்தல் வேண்டும்; விழி, இடை, குழல் என்பனபோன்ற சினைப்பெயர்களைப் 'பெண்' என்னும் பொருள்பட ஆக்கிய வழக்குக் காண்பதரிது. மற்று 'அகன்றவிழி' என்பதை ஒன்றாகக்கொண்டு, அகன்ற விழிகளை உடையவள் என்று பொருள்படுகின்ற அன்மொழித்தொகையாகக் கொள்வதற்கு மிலக்கணமில்லை. ஏனெனில், அன்மொழித் தொகை ஒரு தொகைநிலைத்தொடரின் புறத்தே பிறத்தல்வேண்டும். 'அகன்றவிழி' என்பதோ தொகாநிலைத்தொடர்களில் ஒன்றாகிய பெயரெச்சத்தொடர். 'அகல்விழி' என நிற்குமாறாற்றான் வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என இயலும்—(6-447, 466). எவ்வாறாயினும் 'விழி' என்பது இங்கு உயர்திணைப் பொருளில் நிற்பதால், விழி கோநகரி என்பது ஆறும் வேற்றுமைத் தொகையாயினும் வல்லினமெய் மிகவில்லை—(7-295)

குடங்கையின், என்பதிலுள்ள, இன், ஒப்புப்பொருளுடைய ஐந்தாம் வேற்றுமை உருபு. (5-923)

இலக்கணம்.

இவ்வாண்டு முதலிதழில் பாகுபாடுசெய்து காட்டியிருக்கின்ற புணர்ச்சி வகைகளில், 4-வது ஆகிய, நிலைமொழியிறுதிவருமொழிமுதல் ஆகியஈரிடத்தும் மெய்யெழுத்துக்கள் வந்து புணர்வதற்குரிய விதிகளை அடுத்தவாரம்முதல் கற்கப் புகுவோம்.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

[381-வதுபக்கத் தொடர்ச்சி]

தபோவனம்

தற்காலநாகரிகத்தின் அதிதேவதையாயமைந்தவொருதிருமகள் தங்குவதற்குச் செங்கற்கட்டிடப்பட்டினங்களே தக்க தாமரைமலர்களாய்த் தோன்றியிருக்கின்றன. முன்னேற்றம் என்னும் சூரியன் உயர்ந்து உயர்ந்து ஆகாயத்தின் உச்சியைச் சேரச்சேர அம்மலரின் இதழ்கள் ஒவ்வொன்றாக விரிந்துவிரிந்து எல்லாத்திசைகளிலும் படிப்படியாக அவிழ்வதைக் காணலாம். இப்படிச் சுண்ணாம்பும் செங்கல்லுமாகச் சேர்ந்து யாவற்றையும்தன்வயமாக்கிக்கொள்கின்றஇவ்வெற்றியின் போக்கைத் தடுக்கவல்லவல்லமை உலகிற்கு இல்லாமற் போய்விட்டது.

கட்டிடக்குவியல்களான இத்தகைய பட்டினத்தின் கண்ணே மனிதன் வித்தைகள் கற்கிறான், கற்றவித்தையைக் கையாள்கின்றான்; பொருள் ஈட்டுகின்றான், ஈட்டிய பொருளைச் செலவுசெய்கின்றான்; எல்லாத்திசைகளிலிருந்தும் சக்தியும் செல்வமும் எய்தித் தன்னை நிரப்பிக்கொள்கின்றான். நாகரிகம் அனைத்திற்கும் நடுத்தூணாயிருக்கின்ற செல்வப்பெருக்குப் பட்டினத்திலே உற்பத்தியாகின்றது; பட்டினத்திற்கே உரியது.

நாகரிகத்தின் நிலை இவ்வாறிருக்க, அதனைத் தவிர்த்து வேறொன்றைச் சிந்திப்பதும் இக்காலம் இயலாததாகிவிட்டது.மனிதர் பற்பலர் ஒன்றுசேருங்கால்,விசித்திரமானபல்வகைப்புத்திகள் நெருங்கிக்கலப்பதால், மானுடமனம் விழிப்படைகின்றது.அதுவுமன்றி,எல்லாத்திசைகளிலிருந்தும் இடிபடுவதால் மானுடசக்தியும் பலமடைகின்றது.

இதன் பின்னர், மனிதசக்தி இவ்வண்ணம் விழிப்புநிலையும் வலிமையும் அடையும்போது அது தன்னைத் தான் எளிதினில் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய ஓர் இடத்தைத் தேட ஆரம்பிக்கின்றது. மனிதர் பலர் உத்தமமான பல்வகைச் சிருஷ்டித்தொழில்களில் எப்பொழுதும் எங்கு முயன்றுகொண்டிருக்கின்றார்களோ அவ்விடமே அதற்கு ஏற்ற இடம். அத்தகைய இடம், பட்டினம்.

ஆயினும், ஆதியில் மனிதர் நெருங்கி வசித்துப் பட்டினத்தை உண்டாக்கியது நாகரிகத்தின் ஆவேசத்தினாலன்று. மற்று,பகைவர்களின் கைக்கு அகப்படாமல் தப்பி வாழவல்ல காவல் வசதிகளுடைய இடத்தில் வசிக்கவிரும்பியதே முதலில் மனிதர்கள் ஒன்றுகூடநேர்ந்ததற்குக் காரணமாய்நின்றது.காரணம் எதுவாயினும், மனிதர் பலர் ஒன்றுகூடி வசிக்க நேர்கின்றபோது, அதனால் ஏற்படுகின்ற பலவகை அவசியங்களுக்கு மனிதபுத்தி ஒரு உருவத்தை உண்டாக்கிவைக்கின்றது. இந்த உருவமே நாகரிகத்தின் தோற்றம்; தோன்றியபின் அது தானே வளரலாகின்றது.

முன்சொல்லிய இவையனைத்தும் ஏனைய தேசங்களின் நாகரிக சரித்திரத்திற்கே ஏற்கும். இந்தப்பாரதநாட்டின் நாகரிகத்தின் பிறப்பும் வளர்ச்சியும் வேறு.

இத்தேயத்தின்கண் இந்நாகரிக சம்பவம் நேர்ந்தவிதம் மிகவும் ஆச்சரியமாயுளது. பாரதநாட்டு நாகரிகத்தின் மூலஊற்றுப் பட்டினத்தில் அல்லாமல் வனத்திலேயே தோன்றியது. இந்நாகரிகம் ஆதியில் விந்தையுற மலர்ந்தவிடங்களில் மனிதர் நெருங்கித் திரண்டு ஒருவரோடொருவர் இடிபட்டு வருந்திய காட்சி காணப்படவில்லை. அங்குத் தருக்களும் கொடிகளும் மலர்களும் நதிகளும், பொலிந்தன. இந்த இயற்கைச் செல்வமோடு அமைதியுறக் கலந்து வாழ்வதற்குஉரிய அவகாசமும் கிடைத்தது. அங்கு, மனிதர் வசித்தனர். விசாலமாக வசிப்பதற்கு வேண்டியபடி பரந்த வெளியிடங்களும் இருந்தன. ஒருவரோடொருவர் இகல்வதற்கு நினைவுமில்லை, நிமித்தமுமில்லை. பரந்த இவ்வெளியிடங்கள் பாரதநாட்டின் மணப்பான்மையைக் கதுவிக்கொண்டு உணர்ச்சியற்ற தாக்காமல், மேலும்மேலும் ஒளிபெற்றுத் திகழும்படியே செய்தது. இவ்வகை நிலைமையும் நன்மையும் இவ்வுலகில் வேறெங்கும் நேர்ந்ததாகத் தெரியவில்லை. வேறு கதியற்றுக் காடுகளில் அடைபட்டிருக்கின்றமனிதர் பெருமையிழந்து புல்லர்களேயாகி முடிந்திருக்கின்றார். புலிபோல் மூர்க்கர்களாகவேனும் மான்போல் மடையர்களாகவேனும் மாறவே காண்கிறோம். மற்று,புராதனபாரதநாட்டிலோ, ஜனநெருக்கமில்லா வனவாசம், மனிதர் மதியைக் கொதிக்கவைக்காமலும் உறைவித்துவிடாமலும் காத்ததுமன்றி,தன்னின்று உதித்த நாகரிகத்தின் மூலமாகப் பாரதநாட்டைப் பிரகாசிக்கச் செய்யக்கூடிய ஓர் சக்தியைக்கொடுத்தது. இன்றையவரையிலுங்கூட அப்பிரகாசத்தின் பிரவாகம் தடைப்பட்டுத் தேங்கிவிடவில்லை.

இவ்வண்ணம், வனத்தின்கண் வசித்தவர்கள் முன் சாதித்தவைகளின் மூலமாகப் பாரதநாட்டு நாகரிகம் அடைந்தசக்தியானதுவெளியிலிருந்துமோதியஇடர்களினுல் விளையவில்லை; இவ்வுலக நடமாட்டத்திற்கு வேண்டிய பொருள்களை ஈட்டிக்கொள்ள முயல்கின்ற முயற்சியினுல் விழிப்படையவில்லை. ஆகையாற்றான், அச்சக்தி புறவுலகத்திலேயே தன்நாட்டத்தை நாட்டியிருக்க அவசியமே இல்லாததாயிற்று. வனத்தின்கண் வாழ்ந்த அவ்வுத்தம வித்தகர், தியானத்தின்மூலமாக விச்வத்தினுள் பிரவேசித்தனர்; நிகிலத்துடன்தம்ஆன்மாவின் தொடர்பை நிலைநிறுத்திக்கொண்டனர். ஆதலின், செல்வத்தின் உபகரணங்களால் பாரதநாடு தன் நாகரிகத்தைக் காட்டாததாயிற்று. இந் நாகரிகத்தின் மாலுமிகள் ஏகாந்தவாசிகள்; அரைக்கச்சைமாத்திரம் கட்டிய தபஸிகள்.

ஒருவகைநோக்குமிடத்து நிலத்திற்கேற்றபடிதோன்றுகின்றது நாகரிகத்தின் தோற்றம்.கடற்கரையில் வசிப்பவர் வணிகத்தை மேற்கொண்டனர். வேண்டிய உணவின்றிப் பசிதாக முடையவர்களாகத் தன்பால் வசிப்பவர்களை வைத்திருந்த பாலைவனமே, அவர்களைப் பூமியை வென்று தம்முடைமை செய்துகொண்டவர்களாக்கியது. இப்படியே காலதேச வர்த்தமானங்களின் வேற்றுமைக்கிணங்க வேறுவேறு மனிதர் வேறுவேறு பாதையைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். சமபூமியான ஆரியவர்த்தம் வனபூமியான பாரதநாட்டிற்குச் சிறந்தோர் செல்வியைத் தந்தளித்தது. அளித்து, நிகிலத்தின் அந்தரங்கமானவோர் இரகசிய உலகத்தைக் கண்டுபிடிக்கும்படி பாரதநாட்டின் புத்தியை ஏவியது. இதுபற்றி, சிந்துவென்னும் மகாசமுத்திரத்தின்கண்உள்ள தீவுகள் பலவற்றினின்று திரட்டிக்கொணர்ந்தசெல்வங்களின் நற்பயனை எல்லோரும் நாடோறும்அங்கீகரித்தல்வேண்டும். மரங்களின் செடிகளின் இடையே, இப்பிரகிருதியின் பிராணலீலைகள் பகலிலும் இரவிலும் பருவங்களிலும் வேறுவேறாகத் தோன்றி, விசித்திரரூபங்களாகவும் தொனிகளாகவும் புதிய புதிய பாவனைகளாகவும் நிரந்தரம் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. இதன்மத்தியில் தியானசிந்தையுடன் வசித்தவர்கள், எத்திசையிலும் சூழ்ந்த வோர் ஆனந்தமயமான இரகசியத்தை இனிது அனுபவித்தனர். ஆதலாற்றான், "யதிதம் கிஞ்ச ஸர்வம் பிராண ஏசதி நிஸ்ரிதம்" (உள்ளனயாவும் பரமபிராணனிலிருந்து உற்பத்தியாகி அப்பிராணனின் மத்தியில் கம்பீரம் அடைகின்றன) என்று அன்னவர் இயம்ப நேர்ந்தது எளியதாயிற்று. இன்னவர் செங்கல்லும் மாமுமிரும்புங்கொண்டு தம் கையினுல் தாமே கட்டிக்கொண்டு ஒரு கூட்டில் வசிக்கவில்லை. அவர் வஸித்தவிடத்தில், பிரபஞ்சமடங்கலும் வியாபித்துள்ள ஒருமகத்தான ஜீவனுடன் அவர்களுடைய ஜீவன் தடையற்ற சம்பந்தமுடையதா யிருந்தது. அவ்விடம், அவர்கள் தங்குவதற்கு நிழலையும் உவப்பதற்கு மலர்களையும் உண்பதற்குக் கனிகளையும் ஆராதனைகள் புரிவதற்கு அக்கினியையும் அறுகம்புல்லையும் அளித்தது. அவர் செய்த கர்மங்கள் அனைத்தும் அவருக்கு வாய்த்த காலம் அனைத்தும் அவர் வசித்த வனத்தின் வைபவங்கள் அனைத்தும், பரமான்மாவுடன் நிறைந்த சம்பந்தமுடையவைகளாக இருந்தன. இவ்வகை உபாயத்தினுலே, தங்கள் ஆன்மாவை எங்குமயமாய ஒரு மகத்தான ஆன்மாவுடன் ஒற்றுமைப்படுத்தியே அதனை அனுபவித்து அறிந்துகொண்டனர். இதனுல், பத்துத் திக்கிலும் பரந்திருக்கின்ற இப்பிரபஞ்சம் ஜீவனற்றவோர் வெற்றிடமாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இப்பிரகிருதியானது, ஒளியென்றும் காற்றென்றும் புனலென்றும், உணவென்றும் உவந்துஅளித்த கொடைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆயினும், மண்ணிலும் மரத்திலும் வறிதாய ஆகாயவெளியிலும் அல்லாமல், புத்திநிறைந்தவோர் அந்தமற்ற ஆகாயத்தின் மத்தியிலிருந்தே இக்கொடைகள் ஊறுகின்றன என்பதைத் தம் அனுபவத்தின்மூலமாக மிக எளிதில் அறிந்துகொண்டனர். ஆதலாற்றான், சுவாசம் ஒளி அன்னம் தண்ணீர் அனைத்தும் அவ்வானந்தத்தின்பொருட்டு அவர்களால் பயபக்தியுடன் மிகவிரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வண்ணம், தன் பிராணனின் மூலமாகவும் இதயத்தின் வாயிலாகவும் புத்தியின் விசாலத்தாலும், நிகில சராசரங்களைத் தன் ஆன்மாவின் உறவினர்போல் ஏற்றுக்கொண்டதே இப்பாரதநாடு பெற்றுள பேறுகளிளெல்லாம் மிகப்பெரியதாம்.

எனின், பாரதநாட்டின்சித்தத்தைத் தபோவனமானது, தன் நிழலின் அமைதியில் வளர்த்துத் தந்தவகையை அறிந்துகொள்வது எளிதே. பாரதநாட்டின் இருபெரும் புராதன யுகங்கள் கழிந்தன; ஒன்று வேதயுகம், மற்றது புத்தயுகம். இவ்விரண்டு யுகங்களையும் கைத்தாயாக இருந்து காப்பாற்றியது வனமே. வேத இருடிகள் மாத்திரமன்றிப் புத்தபகவானும் தம் உபதேசத்தை மாஞ்சோலைகளிலும் மூங்கில்வனங்களிலுமே அடைந்தனர். இராஜமாளிகை அவருக்கு இடம் போதாமற் போயிற்று. தருக்கள் அடர்ந்த வனமேதான் அவரை மார்போடணைத்து ஏற்றுக்கொண்டது.

இதன் பின்னர், பாரதநாட்டில், அரசும் ஆட்சியும் பட்டினங்களும் நகரங்களும் படிப்படியாக ஸ்தாபிக்கப்பட்டன. பிறதேசங்களுடன் வர்த்தகம் நடைபெறத்தலைப்பட்டது. விஷயங்களின்பால் விளைந்ததோர் வாஞ்சையினுல் இவர் நிழல்நிறைந்தவனங்களை அகல அகல அகற்றிவிட்டனர். எனினும், மகிமையும் செல்வமும் யெவளனபருவமும் வாய்ந்த இப்பாரதநாடு வனத்திற்குத் தான் எத்துணைக் கடன்பட்டிருந்ததென்பதை ஒப்புக்கொள்ள ஒருபொழுதும் வெட்கப்பட்டதில்லை. மானுடமுயற்சிகள் எல்லாவற்றிலும் தவமே மேலானதென்று அது கைக்கொண்டு பாராட்டியிருந்தது. சிற்றரசர்களும்பேரரசர்களும், வனவாசிகளான தவசிகளையே தங்களுக்கு ஆதி புருஷர்களாகக்கொண்டு கெளரவமடைந்தார்கள். இப் பாரதநாட்டின் புராதன கதைகள்முதல் மகத்தானவைகள் அனைத்தும், ஆச்சரியமுடையன அனைத்தும், முதன்மையானவை அனைத்தும், தூய்மையானவை அனைத்தும், ஆராதனைக்குத் தகுதியான அனைத்தும், பண்டைய தபோவனத்தின் நினைவுடனேயே கலந்திருக்கின்றன. உலகினை ஆண்டிருந்த பேரரசர் எத்தனையோ பலர். அவர் பேர்களும் மறைந்துவிட்டன. எனினும், கலகங்கள் எத்தனை நேர்ந்தாலும், வனத்தின் வதந்தியே தன் பிராணனுக்கு உரியதென்று அதனையோ மறக்காமல் இன்றுவரையில் வைத்திருக்கு மிது மனித சரித்திரத்தினுள் இப் பாரதநாட்டின் சிறப்பாம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[394-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 8-ம் தசகம்.

1-ம் பாசுரம்

பொன்னுல காளீரோ புவனி
    முழுதா ளீரோ
நன்னல புள்ளினங்காள் வினையாட்டியே
    னுனி ரந்தேன்
முன்னுலகங்க ளெல்லாம் படைத்த
    முகில்வண்ணன் கண்ண
னென்னலங் கொண்டபிரான் றனக்கென்
    னிலைமை யுரைத்தே.

அவதாரிகை-ஆழ்வார் இத்தசகத்தில் எம்பெருமானுக்குத் தூது விடுகின்றார். தன்ஆற்றாமையை அநேக தூதர்கள் மூலமாய் அவனுக்கு விண்ணப்பஞ்செய்து, அவனை நெடுநேரம் பிரிந்த விரஹத்தால் தவிக்கும் ஓர் பிராட்டி பாசுரத்தால் அவன்வரவை வேண்டுகின்றார். "மாலுக்கு வையம்" என்கின்ற தசகத்தில் தேஹபலங் குன்றினவர், "உண்ணுஞ்சோற்றில்" மனோநிச்சயமும் தைரியமும் மழுங்கி நிலைதளர்ந்து தனியாய் உடன் போக்குப் போனதையும் யோசிக்குங்கால் இவர் இனி ஏன் தூது விடவேணுமென்ற கேள்விக்கு இடம் ஏற்படுகின்றது. இதற்கெல்லாம் சிற்சில சமாதானம் கூறுவோம்:—

I. நாம், சென்ற தசகம் ஆறும் பாசுரத்தில் "இளமான் இனிப்போய்த் திருக்கோளூருக்கே சென்று திருமால் திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு நின்று நின்று நெடுங்கண்கள் பனிப்ப நையும்" என்பதற்கு உரை கூறியபோது, இப்பிராட்டி அவ்வூரில் பகவானைக் கண்டு அவனது திவ்விய ஸௌந்தரியத்தில் ஈடுபட்டுக் கண்களில் ஆநந்தபாஷ்பம் நிறைய அனுபவித்துச் சந்தோஷப்பட்டாளென்று எழுதினோம். இவ்வுரை பெரிய ஆசான் ஆறாயிரப்படிகாரர் ஸம்மதமுள்ளது. இப்படியாயின் ஒருக்ஷணம் முன்னரே கலவிஏற்பட்ட பிராட்டி அது வெகுகாலமாய்விட்டதுபோல் உடனே தூதுவிட என்ன நியாயம்? ஸ்வாபதேசத்தில் ஆழ்வாருக்குத் திருக்கோளூரில் ஏற்பட்டதெல்லாம் மனோரத மாத்திரம் ஆயிற்றேதவிர மறுபடியும் எம்பெருமானைக் காணப்பெறாமையாலே விரஹத்தை ஸஹிக்காதவராய் ஓர் பிராட்டி பாசுரத்தாலே தூது விடுகின்றார். அந்யாபதேசத்திலும் மேல்தசகத்தின்படி கலவை கிட்டிய பிராட்டியும் தனக்குக்கிடைத்த கலவையைக்கொண்டு திருப்தி யடையாதவளாய்த் திரும்பியும் கலவையை யாசைபட்டுத் தூது விடுகிறாளென்று கொள்ளவேண்டும்.

I (a) அல்லது, பகவானே சென்றுபோன கலவையில் நிரம்ப ஆதரமும் ரஸமும் பாராட்டியதால் அப்பிராட்டிக்குச் சலிப்புத் தட்டாமல் ஆற்றிக்கொள்வதின் நிமித்தம் அவளைவிட்டுப் பிரிந்தவன் வெகு நேரமாகியும் திரும்பிவராததின் நிமித்தம் இந்தப்பிராட்டி விரஹ வியஸநத்தால் தூதுவிட்டு அவனை அழைக்கிறாளென்று கொள்ளலாம்.

II. மேல்கண்ட 7ம் தசகம் 6வது பாசுரத்தில், பகவானுடன் அந்தப் பிராட்டிக்குக் கலவை ஏற்பட்டு அவள் சந்தோஷப்பட்டிருப்பாள் என்றுஎண்ணியது அவள் தாயின் ஊஹமேதவிரக் கலவை ஏற்பட்டதை ஒருவரும் பார்த்ததாக மொழியவில்லை. அந்தக் கலவி வாஸ்தவத்தில் ஏற்படாமலே இருந்திருக்கக் கூடும். அப்படியாயின் அப்பிராட்டியின் நடைத்தளர்ச்சியும் தேகமெலிவும் அவள் திருக்கோளூர் போவதற்கு இடையூறாக நின்றிருக்கும். இந்த ஸ்திதியில் திருக்கோளூரின் அருகாமையில் ஓர் உத்தியானவனத்தினின்றும் தூதுவிடுவதுநேரக்கூடும். ஸ்வாபதேசத்தில் ஆழ்வாரின் மானஸாநுபவம் கனவுபோல் தோன்றி மறைந்திருந்ததால் தூதுவிட ஹேது உண்டாயிற்று.

III. ஆழ்வார் திருக்கோளூ ரெம்பெருமான்பக்கல் அவனது குணதிசயங்களைச் சிந்தித்து ஒருவாறு தரித்திருந்தாராகிலும் அந்தப் பகவதநுபவம் நிறைய ஊன்றித்தம்பால் நிலைபெறாமையாலே பழையபடி விரஹவியஸநம் அவரையேங்கும்படிசெய்யவே தூதுவிட ஏற்பட்டதென்றுகொள்ளலாம். இவ்வளவில் ஆழ்வாரினுடைய மனோநிலை தன்னைத்தானே யாரென்று அறியாமலும் பிற வஸ்துக்களிடத்தில் உணர்ச்சிசெத்துங்கிடந்து,மஹாபக்தியிலும்தபஸிலும்முதிர்ந்த பிரஹலாத ஆழ்வான் "நான் என்னையும் அறியேன் மற்றுளதையு முணரேன்" என்றாற்போலத் தன் உணர்ச்சியேயின்றி இருந்து திகைத்து மதிமயங்கினர். சோறும் நீருமில்லாமல் விடாய்த்தவன் ஓர் மடுவின் நீரில் மூழ்கிச் சற்று விடாய் தீர்ந்தானே யாகிலும் அதனுல் பசிதாகங்கள் தீராதவன்போல் ஆழ்வார், எம்பெருமானிடத்தி லேற்பட்ட கலவியால் தம் சுவயஉணர்ச்சியைப் பெற்றதும் தாமுளராக ஸ்மரணை புத்திக்குத் தெளியவே ஆசையும் அவரைத்தூண்ட, பகவானின்

ஸேவையை யபேக்ஷிப்பவராயினுரென்று நாம் கொள்ளவேண்டும். பிரஹலாதாழ்வானு மிந்நிலையில் "நான் பிரஹ்லாதனென்றுஉணர்ந்தேன்" என்றுகூறினன்.நரஸிம்மாவதாரத்திற்கு முன்னரே எங்கும் நாராயணனைக் கண்ட பிரஹலாதன் தான் யாரென்று மறந்திருந்தானென்றும் பிறகு அம்மூர்த்தி பிரஸன்னமான பின்னரே தன்னைத் தான் பிரஹலாதனென் றுணர்ந்தானென்றும் பக்தியோக அந்திமகவட்டைப்பற்றிப் புராணங்கள்கூறியிருப்பதை ஆழ்வார்தம்பால்அனுஷ்டித்துக் காண்பிக்கின்றார்.

பதக்குறிப்புக்கள்:—நன்னலம் புள்ளினங்காள் - பிறர்க்குதவியே செய்யும் பக்ஷி இனங்களே. பொன்னுலகாளீரோ - பொன்னுலகை உடைத்தாயிருக்கிறவன் அதைப் பிறர்க்குத் தரக்கூடும். இப்பிராட்டிக்கு அது எப்படிச் சொந்தம்? அது மாத்திரமல்ல- புவனியை - உலகத்தை முழுவதும் ஆளச்சொல்கிறாள். ராஜ்ஜியபாரம் செய்யுங்கோள். சென்றபத்தி னிறுதியில் திருக்கோளூருக்கே சிந்தைவைத்து ஆதரவாய் அதைக் கற்பவர் பொன்னுலகை-(வைகுண்டத்தை) ஆள்வார் என்றார். இப்பிராட்டியின் கஷ்டத்தையும் அதிர்ஷ்டத்தையும் நினைப்பவர்களே வைகுண்டம் ஆள்வாரானல் அவற்றை நீக்குபவர் அதனை ஆள்வது பற்றி என்ன சந்தேகம்? பகவானுக்குப் பொன்னுலகும்மண்ணுலகும் உள்ளதின் உபயோகம் இவளுக்கு இஷ்டவிநியோகமாக ஆவதற்கே யல்லவோ என்பது திருவுள்ளம். தூதாகப்போகும் பக்ஷிகளுக்கு இவ்வுலகங்களைக் கொடுப்பது கூலிக்காக அல்ல என்று தோன்ற, "நன்னலம்" உள்ளவர்களென்று பக்ஷிகளை மதித்து விளிக்கின்றாள். "செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்வானகமு மாற்றலரிது" என்ற வள்ளுவருரையின் தத்துவத்தை இப்பிராட்டி உட்கொண்டாள் போலும்.

வினையாட்டியேன்—பூர்வ கர்மத்தால் நாயகனை விட்டு விலகித் தனித்திருப்பவள்.

முகில்வண்ணன்:—மேகம்போல ஔதாரியமுள்ளவன்; என் நலங் கொண்டபிரான் - என் ஸௌந்தரியத்தையும் என் ஆத்ம குணங்களையும் என் ஆதம்ஸ்வரூபத்தையும் அபஹரித்தவன்—அதாவது எனக்கு உதவாமல் செய்தவன்.

பொழிப்புரை:—என்னோடு கலவை செய்து வெகுவிதமாய்ப்பழகி என்னுடைய ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக்கொண்டு என்னைத் தோற்பித்துத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட எம்பெருமான் தன்னைப் பிரிந்து நான் படுகின்ற துயரத்தைச் சென்று சொல்லவேண்டுமென்று புள்ளினங்களைக் குறித்துச் சொல்ல, பின்னையும் அவை போகாதிருந்தவாறே அவள் நம்முடைய அபேக்ஷிதம் செய்யாதொழியில்செய்வதென் என்று போகாதிருந்தினராக நினைத்துப் பகவான் பரமகாருண்ய தயாநிதியாகையால்நீங்கள்சொல்வதை ஆதரித்துக் கேட்பான். உங்களுக்குப் பொன்னுலகும் இவ்வுலகமும் பரிசாக அளிக்கிறேனென்று சொல்லிப் பின்னையும் யோஜித்து நீங்கள்செய்யும் பரமோபகாரத்துக்கு இவை கைம்மாறுகுமோ; நீங்களோ பரமதயையுள்ள இனங்கள் உங்களை நான் இரந்து யாசிக்கிறேன் என்றான்.

சில ஐயம்

அறிஞர் தணிகாசல முதலியாரவர்கள் அருமைக் "கலாநிலயத்" தில் சில வருடங்களாகத் தொடர்ந்து எழுதிவரும் "அப்பர்" என்கின்ற தலைப்போடு கூடிய உயர்ந்த கட்டுரைகளில் "இதிகாசம்" என்ற பிரிவின்கீழ் வெளியிடும் ஆராய்ச்சி யுரைகளைப் படித்துணர்கையில் அடியேற்கெழுந்த ஐயங்கள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

(1) வால்மீகியை முதனூலாகக்கொண்டு தென்மொழியில் இராமசரிதையை வழிநூலாகச் செய்தருளிய கம்பர் சிற்சில இடங்களில் முதனூலோடு மாறுபட்டும் புதுவது புனைந்தும் இயற்றியது தவறுதல்எங்ஙனம்? நாம் உலகவாழ்க்கையில் நெறிதவறித்தத்தளிக்கும்பொழுது நமக்குமுன் வாழ்ந்த ஆன்றோர்நடந்த நல்வழியையறிந்துமனத்துணிவுகொண்டுஅவ்வழியில் நாமும் நடந்து நன்மை பெறுவதற்கென்ற உண்மையோடு அறிஞர்களால் வரையப்படுவனவே வாழ்க்கை வரலாறுகளாகும். இதிகாசம் புராணம் என்ற பகுப்பினையுடைய வரலாறுகளும் இத்தன்மையவே. இனி, வால்மீகி கம்பர் இவ்விருவரில் ஒவ்வொரு கவியின் காலம் எது? அக்கவி உத்தேசித்த ஜனங்கள் எவர்கள்? அவர் வெளியிட்ட சந்தர்ப்பம் என்ன? இவை போன்றவற்றை ஒருசிறிதுசிந்திக்கையில் கம்பர் வால்மீகியோடு சில இடங்களில் மாறுபடநேர்ந்தது முறைதான் என்ற துணிபு ஏற்படுகின்றது. ஆயினும், முதலியாரவர்கள் "...உண்மையிலே தவறுமல் வால்மீகி எழுதியதனும் இராமனை அவர் கம்பன்போல் ஒரே உயர்வில் வைத்துச்சித்திரிக்கவில்லை" (வால்-7 பக்கம் 187) என்கிறார். மேலும் "அக்காலத்தில் மக்கள் விரும்பும் மாந்தர்க்கு(ஆரியர்களுக்கு)க் கோசலநாட்டில்நாடோறும்யாகங்களும் வேட்டைகளும் நிறைந்திருக்க, குலோத்துங்கன் அரண்மனை விருந்துபோல்,

முந்து முக்கனியி னொடு முதிரையின் முழுத்த நெய்யின்
செந்தயிர்க்கண்டங்கண்டமிடையிடைசெறிந்தசோற்றில்
தந்தமி லிருந்து தாமும் விருந்தொடு தமரி னோடும்
அந்தண ரமுத ருண்டி யயில்வுறும் அமலைத் தெங்கும்

இருந்த தென்பன் கம்பன். ஆராய்ந்து நோக்குங்காலையில் கம்பன் எழுதிய கோசலநாடு வால்மீகி காட்டிய கோசலமன்று; கம்பன் காலத்திய சோணாடே என்பது திண்ணம். அயோத்தியாபுரி என வர்ணித்தது உறையூரேயாம்......கடல் இவ்வாறிருக்குமெனக் காணக்கூடாத கோசலமாகிய உள்நாட்டில்

'கலஞ் சுரக்கும் நிதியம் கணக்கிலா
நிலஞ் சுரக்கும் நிறைவள நன்மணி'

என்றான்" எனக் கூறுகின்றார். (வால்யூம் 7. பக்கம் 325) வால்மீகியால் மனிதத்தன்மையொடு பாவிக்கப்பட்ட இராமபிரான் கம்பர் காலத்தில் இறைவனாகப் போற்றப்பட்டமையின், அதற்கேற்பவே நூல் செய்யாமல் முன்னொரு காலத்தில் வாழ்ந்தவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பிற்காலத்தில் மாறுபட்ட பழக்கவழக்கமுடைய மக்களுக்குப் பயன்படாவாறு அப்படியே சித்திரித்துக் காட்டுவதால் யாது பயன்?

அக்காலத்து ஆரியரனைவரும் ஊன் உண்போராக, கோசல நாட்டு ஆரியர்கள் குலோத்துங்க சோழனது அரண்மனை விருந்துபோல் சைவவகையற்ற உணவுகள் உண்டனரென்று கம்பர் கூறியது தாம் வாழ்ந்தசோணாட்டைப் பற்றியதேயன்றி வேறல்ல என முதலியாரவர்கள் மொழிகின்றார்கள். ஆனல்,கம்பரே அக் கோசலநாட்டு மக்களை

தெள்விளி சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவ மாந்தி
வள்விசி கருவி பம்ப வயின்வயின் வழங்கு பாடல்

எனவும்,

நந்தன வனத்தலர் கொய்து நல்விபோல்
வந்திளை யவரொடு வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் மாந்திச்சு
துந்தலிற் பொழுதுபோம் சிலர்க்கத் தொன்னகர்

எனவும், மிதிலாபுரி மாதர்களை,

பளிக்கு வள்ளத்து வார்த்த பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படு நகைய வாகி வெறியன மிழற்று கின்ற

என்னவும் கூறியிருக்கின்றார். இக்கூற்றுக் கம்பர் சோணாட்டில் கண்டகாட்சியா, கோசலநாட்டு மாந்தர்தம் வாழ்க்கையா? அறிஞர் சேஷாசலம் ஐயரவர்கள் கோசலநாட்டார் வாழ்க்கை யெனக்கொண்டு மிகமிக அரிதின் முயன்றுஅமைதி காட்டியிருக்கிறார்கள். (வா-1, பக் - 274)

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பா டத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே
என்போடு தடிபடு வழியெல்லாம்எமக்கீயு மன்னே'

எனவரும் பழைய தமிழ்ச்செய்யுள் ஒன்று சோழனொருவனைக் குறித்து ஔவையார் பாடியதாக வழங்கப்படுகிறது. அன்றியும் புறநானூறுமுதலிய பழைய தமிழ்ச்சுவடிகளில் தமிழர்கள் ஊனும் மதுவும் உண்டதாக வரும் பாடல்கள் பல. எனவே கம்பர் காலத்தில் தமிழர்கள் அறவுணவும் ஆரியர்கள் மறவுணவும் உண்டனரென்பது எவ்வாறமையும்? கடலுக்குப் பல காவத தூரத்தில் கோசலநாடு இருப்பினும், அந்நாட்டிறைவனை அரசர்க்கரசனுகக் கூறியிருத்தலின் "கலம் கணக்கிலா நிதியம் சுரத்தலில்" முரண்பாடி யாது?

(2) "எவ்விடத்தும் அக்காலத்தில் பரவியிருந்த சைவசமயத்திற்கு உடன்பாடிலாதவராய் இராமர் இருந்திருப்பவராயின்தென்னாட்டாருடன்அத்துணை அன்பாய்க் கலந்திருத்தல் அரிது" [வா-7. ப, 326] என்பர் முதலியாரவர்கள். முற்காலத்தில் எவர் எவ்வெக்கொள்கையுடையாராயினும் நற்செய்கை யொன்றில் அனைவரும் வேற்றுமையின்றி ஒத்துழைத்தனர் என்பதற்குச் சங்க வளர்ச்சியே சான்றாகும். பௌத்தரொடு சமணர் சைவர் வைணவர் முதலிய பலதிறக் கொள்கையினரும் தமிழ்மொழிவளர்ச்சியில் ஒன்றிய கருத்தினராய்உழைத்திருக்கின்றனர். செங்குட்டுவன் அவன்இளவல் கூத்தனர் ஆகிய மூவரும் முத்திறக் கொள்கையுடையவர். கொள்கை பேதுவாக,அம்மூவருள்ளத்தும் வளர்ந்துவந்த நேயம் குறைந்ததாக வரலாற்றில்இல்லை. "வன்கண்ணர் வாளரக்கர் வாழ்வினையொன்றில்" லாராகிய "கொடிய அரக்கரைக்கொன்றுவீழ்த்து"வதற்கு இராமர் தமிழ் மக்களின் அன்பும் உதவியும்பெறவேண்டிச் சைவசமயத்தைத் தழுவினரென்பது அக்காலத்திய தமிழர்களுக்கு அவமானம் விளைவிப்பதாகும்.

(3) விசுவாமித்திரர் அகத்தியர் முதலிய முனிவர்களின் அருள்கொண்டே இராமர் தாடகை முதலிய அரக்கரைக்கொன்றனரென்பது யுக்திவாதத்திற்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. [வா - 7. ப. 292]

"தேவரிற் றேசமிக்க என்பெரும் சேமம் தன்னால்
ஏவரு நிருதர் சேனை இராமனே எளிது கொல்லும்"

என்று தசரதமன்னனைப் பார்த்துக் கூறும் கௌசிகர் தமது ஒப்பற்ற வலிமையால் அத்தாடகையை அழித்துவிடலாகாதா? ஒருவனை நோக்கி "அஷ்டைஸ்வரியமும்உண்டாகக்கடவது" என்றுஅட்சதை தூவி வாழ்த்தும் புரோகிதர்கள் முதலியவர் அவ்வாழ்த்துக் குரியவனிடத்திலேயே ஒரு சில காசுக்கு எதிர்பார்த்துநிற்குங்காட்சி எளியேன் மனக்கண்ணிற்புலனுகிறது. அறவினையை மேற்கொண்ட கௌசிகருக்குக் கொலையும் சினமும் குறைவுதரும் என்றால் இளைஞராகிய இராமருக்கு அக்குறைவு நேராதா? க்ஷத்திரிய மரபினில் தோன்றியவர்களுக்குத் தீயரை யழித்தல் முறையென்போமாயின், "கொடிய" இராவணுதியரைக் கொன்ற பாவந்தீர இராமர் இலிங்கப்பிரதிட்டை செய்து கழுவாய் தேடிக்கொண்டார்என்னுங் கூற்று வலிபெறுவதெப்படி?

(4) "இராம லட்சுமணர்கள் அதுகாறும் தாம் கழித்த நாள்கணக்கு அறியார் போலும்! தம் முற்பதவி யறியாரேனும் சாமானியர் திறமையும் ஞாபகசக்தியும் இவர் இழந்தனர் என்பது வெறும் பொய்யன்றோ? வால்மீகியின் நூலிலோ இராமர் இராவணயுத்தத்திற்குப் பின்னர்ப் பரத்துவாச ஆசிரமத்திற்கு விமானத்தில் வந்ததாகவும், அன்று பதினுலுவருடம் முடிவு பெற்றமையால், தனது வருகையைப் பரதனுக்குத்தெரிவிக்கும்பொருட்டு அநுமனைமுன் அனுப்பினரென்றும், அவ்வாறு தெரிவிக்கையில் பரதன் இவ்வருகையை உவகையோடு கொள்கின்றானே, அல்லது வருத்தத்தோடு கொள்கின்றானே என்பதை அறிந்து தனக்குத் தெரிவிக்கும்படி அநுமனுக்குக் கட்டளையிட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. அதனை மாற்றிக் கம்பன் தன் மனம்போனபடி எழுதியது அடாத காரியம். "புளுகினாலும் பொருந்தப் புளுகவேண்டும்" என்பது பழமொழி. (வா-7. ப-325) என்று கூறுவார் முதலியார். எல்லாம் வல்ல இறைவன் மானுடனாகப் பிறந்ததற் கேற்ப மானுடனாகவே நடித்திருக்கின்றார். சில சமயம் மானுடவியல்பிற்கும் மேம்பட்ட செயல்களை அவர் புரிந்திருக்கின்றார். ஆனல் இங்குக் கம்பர் இராமரை மானுடவியல்பினும் தாழ்ந்த இயல்பினையுடையவராகச் செய்துவிட்டாரெனக் கருதுகின்றார் முதலியார். தீயரை யழித்துத் தூயவர்களைக் காப்பதிலேயே திருவுள்ளம்பற்றியிருந்த இராமபிரானுக்குத் தேவர்கள் இராவணவதம் முடிவுபெற்றவன்றே "ஈரே ழாண்டுகள் கழிந்தன; இன்றே அயோத்தி நண்ணல் வேண்டும்; இன்றெனின் பரதனே எரியிடை வீழ்ந்து பொன்றுவன்" என நினைவூட்டுவதும்; இராமர் "ஆண்டு பதினன்கும் இன்றோடு முடிவெய்துமாயின், இன்றே அயோத்திக்குச் சென்று பரதனையடையத்தக்க ஊர்தி வேண்டும்" என இயம்புவதும் மானுடவியல்பிற்கு மாறுபடுவதெவ்வாறென அறிதற்கியலவில்லை. சீதாபிராட்டியைக்கவர்ந்துசென்றவனும் பாவச் செயல்களுக்கெல்லாம் உறைவிடமாயவனும் ஆன இராவணனையும், கொடிய அரக்கர்களையும் சீர்திருத்துவது அல்லது அழிப்பது என்ற கருமத்தில் கண்ணுயிருந்த இராமபிரான் தாயுரைசெய்த ஈரேழ் ஆண்டுகளைக் கணக்கெண்ணி வாராதிருந்தது, அல்லது எண்ணிவந்தும் உற்ற சமயத்தில் நினைவிற் கொள்ளா

தது, மாறுடவியல்பிற்கு முற்றும்பொருந்துவதொரு செயலேயாகும். கம்பர் இங்குப் "பொருந்தப் புளுக வில்லை'யென்னும்உரை பொருத்தமாவதெவ்வாறென அறியேன்.

(5) "இராமர் தமிழ்நாட்டின்கண் சிவபூசை செய்த விவரம் அத்துணையும் வால்மீகிக்குக் கிடைக்காதிருந்தமையால் அதனைக்குறித்து அவர் (வால்மீகி) தமது நூலின்கண்ஒன்றும் கூறவில்லை" (வா-7. -325) என வரையும் முதலியாரவர்கள் இராமர் இராவணவதம் முடிந்த பின்னர்ப் பரத்துவாச ஆசிரமம் அடைந்து, தனது வருகையைப் பரதனுக்கு அறிவிக்குமாறு அநுமனை அனுப்புவதோடு தனது வருகையைக் குறித்துப் பரதன் உவகை கோள்கின்றனு, துயர்கோள்கின்றனு என்பதையும் அறிந்துவரும்படி கூறியதாக வால்மீகி வரைவதற்குரிய விவரம் அவருக்கு (வால்மீகிக்கு) எவ்வாறு கிடைத்தது என்பதை விளக்கவில்லை.

"ஈயடிச்சான் காபி" யென்று பள்ளிச்சிறுவர்கள் பகர்வதுபோல் கம்பர்பெருமான் தன் முதனூலை அப்படியே பின்பற்றி வரையாமல் தமது மாபெரும் புலமைத்திறத்தால் காலத்திற் கேற்றவகையில் மாற்றியமைத்ததைக் கருதியே "கவிப்பேரரசர்" எனத் தமிழ் மக்கள் அவரை விரும்பியழைக்க முற்பட்டனர்போலும்.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[362-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 1.

இடம்:—ஹார்ட்காஸலின் மாளிகையில் ஓர் அறை. ஹேஸ்டிங்ஸும் நெவில்லியும் வருகின்றனர்.

ஹேஸ்ட்:—என்ன ஆச்சரியம் இது! மார்லோவின் தந்தை இவ்விரவு இங்கு வருகிறாரா? இந்தச் செய்தி உனக்கு எங்கே கிடைத்தது?

நெவில்லி:—அது நிச்சயம். ஹார்ட்காஸலுக்கு அவர் எழுதியிருக்கும்கடிதத்தை நானேபார்த்தேன்; தன் மகன் புறப்பட்ட இரண்டொரு மணிநேரங்கழித்துத் தானும் புறப்படப்போவதாக எழுதியிருக்கின்றார்.

ஹேஸ்ட்:—ஆயின், என் அன்பே, அவர் வந்து சேர்வதன்முன்னே நாம் எல்லாவற்றையும் முடித்துக் கொள்ளவேண்டும். அவருக்கு என்னைத் தெரியும். நான் இங்கு இருப்பதைப் பார்த்து என் பேரையும், ஒரு வேளை என் எண்ணத்தையுங்கூட, இவர்களுக்குத் தெரிவித்துவிடுவார்.

நெவில்லி:—நகைகள் பத்திரமாக இருக்கின்றனவோ?

ஹேஸ்ட்:—ஆகா. அவைகளை மார்லோவிடம் அனுப்பியிருக்கின்றேன். எங்கள் பெட்டிகளின் சாவிகளெல்லாம் அவன்தான் வைத்திருக்கின்றான். இதற்கிடையில், நான் சென்று, நாமிருவரும் ஓடிவிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நல்ல குதிரைகள் இரண்டு கொடுப்பதாக டோனி வாக்களித்திருக்கின்றான். அவனுக்கு இப்பொழுது ஒரு சீட்டு எழுதியனுப்பவேண்டும்.

நெவில்லி:—உன் முயற்சி யெல்லாம் பலிக்கட்டும். இதற்கிடையில் நான் என். அத்தையிடம் சென்று, அவள் பிள்ளையின்பால் நான்வைத்திருப்பாக அவள் எண்ணியிருக்கும் அந்த அடங்காத ஆசையைச்சொல்லிச்சொல்லி அவளுக்கு விளையாட்டுக்காட்டிக்கொண்டிருக்கிறேன்,

[இருவரும் போகின்றனர்]

[மார்லோ ஒரு வேலையாள் பின்தொடர வருகின்றான்]

மார்லோ:—இவ்வளவு விலையுயர்ந்தநகைகளைப் பத்திரமாக வைத்துக்கொண்டிருக்கும்படி என்னிடம் அனுப்பினானே ஹேஸ்டிங்ஸ், இதற்கு என்ன அர்த்தம்! சத்திரத்து வாயிலில் நிற்கிற ஒரு வண்டியின் பெட்டிக்குள்ளே அவ்வளவு வைக்கலாமோ? ஏடா, நான் சொன்னபடி, இந்த வீட்டுக்காரியினிடத்தில் அந்த நகைகளைக் கொடுத்தாயா? அவள் கையிலேயே கொடுத்தாயா, அல்லது வேறு யார் கையிலேனுங்கொடுத்துவிட்டாயா?

வேலையாள்:—அவளிடத்திலேயே கொடுத்தேன் சந்தேகமில்லை.

மார்லோ:—அவைகளைப் பத்திரமாய் வைத்திருப்பதாகச் சொன்னாளா?

வேலையாள்:—வேண்டிய சாக்கிரதையாக வைத்திருப்பதாகச் சொன்னாள். அவை என் கையில் எப்படி வந்தன என்றும் கேட்டாள். என்னை இதுபற்றித் தீர விசாரிக்கவேண்டிய அவசியமும் ஏற்படுமாம்.

[போகிறான்]

மார்லோ:—ஹ, ஹ, ஹா! எப்படியும் நகைகள் பத்திரமாயிருக்கின்றன. இந்த வீட்டுச் சனங்களைப் பற்றி யொன்றும் தலைகால் தெரியவில்லையே. அந்தச் சின்னஞ்சிறு வேலைக்காரி ஒருத்தி என் எண்ணத்தினுள் நீங்கியவண்ணமாக இருக்கின்றாள். அவளை உத்தேசித்து மற்றவர் அசட்டுத்தனங்களை யெல்லாம் மறந்துவிடலாம். என்னுடையவள் அவள்; என்னுடையவள் ஆகத்தான் வேண்டும் அவள்.

[ஹேஸ்டிங்ஸ் வருகிறான்]

ஹேஸ்ட்:—தோட்டத்தின் கோடியில் அவளுக்காகக் காத்திருப்பேன் என்பதைச் சொல்ல மறந்துபோனேனே. என்ன, மார்லோவா இது! நிரம்ப உற்சாகமாகவும் இருக்கின்றாய்.

மார்லோ:—என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! வெற்றி முடி, வெற்றிமாலை, எல்லாம் எனக்கே சூட்டு. பார்க்கப்போனால், நம்மைப்போன்ற அடக்கமுடைய ஆடவர்களாலும் மாதர்களை வென்று கவரமுடியாமற் போவதில்லை.

ஹேஸ்ட்:—ஒருசாதி மாதரை என்று சொல். நீ இப்படிக் கொந்தளிக்கும்படி உன் அடக்கம் என்ன வெற்றியை இப்பொழுது அடைந்துவிட்டதோ?

மார்லோ:—சாவிக் கொத்தைத் தன் இடுப்பில் செரிகிக்கொண்டு சிறிய அழகிய மனங்கவர் வஸ்து ஒன்று இங்கு நடமாடுகின்றதே, அதனைப் பார்க்கவில்லையா நீ?

ஹேஸ்ட்:—ஆம், அதற்கென்ன?

மார்லோ:—அவள் என்னுடைமை ஆகிவிட்டாள்; என்ன சொல்வேன் ஹேஸ்டிங்ஸ்! என்ன ஆர்வம், என்ன நடை, என்ன கண்கள், என்ன இதழ்கள்—

சீபோ! முத்தந்தானடா கொடுக்கவிடமாட்டேனென்றுவிட்டாள்.

ஹேஸ்ட்:—அத்தனை, அத்தனை நிச்சயமா உனக்கு அவள்?

மார்லோ:—ஏனடா, ஏன்! என்னை அவள் தனியாக மேன்மாடிக்கு வந்து அவள் சித்திரவேலைகளைப் பார்க்கும்படி அழைத்தாளடா! நான் அச் சித்திரங்களைத் திருத்தித் தரவேண்டுமாம்.

ஹேஸ்ட்:—இருக்கட்டும், மார்லோ, ஒரு பெண்ணின் மானத்தை அபகரிப்பதற்கு இப்படி அலையலாமோ நீ?

மார்லோ:—சீ, சீ! சாப்பாட்டுக்கடையில் வேலை செய்யும் பெண்களின் மானம் எப்படிப்பட்டதென்று நமக்கெல்லாந் தெரியுமே. அவளிடத்திலிருந்து நானொன்றும் அபகரிக்க நினைக்கவில்லை; இந்த வீட்டில் நான் பெறுவதற்கெல்லாம் விலை கொடுக்கவே உத்தேசித்திருக்கிறேன்.

ஹேஸ்ட்:—அந்தப்பெண் சிறந்த கற்புடையவளாகத் தோன்றுகின்றாளே.

மார்லோ:—கற்புடையவளாயின், அதனைக் கெடுக்க ஒருபோதும் நான் முற்படமாட்டேனென்பதை நிச்சயமாக வைத்துக்கொள்.

ஹேஸ்ட்:—நான் உன்னிடம் அனுப்பிய நகைப் பெட்டி பத்திரமாக இருக்கின்றதா?

மார்லோ:—ஓகோ! வேண்டிய பத்திரமாக இருக்கின்றது. சத்திரத்தின் வாயிலில் நிற்கிற ஒரு வண்டியில் அவ்வளவு விலையுயர்ந்தவைகளை வைத்திருக்கலாம் என்று நீ எப்படித்தான் நினைத்தாயோ? போடா, மூட்டாள்! உன்னைவிட நானே இந்த விஷயத்தில் அதிகம் கவனம்செலுத்திப் பத்திரம்செய்திருக்கிறேன். அவைகளை நான்—

ஹேஸ்ட்:—என்ன பண்ணிவிட்டாய்?

மார்லோ:—பத்திரமாய் வைத்திருக்கும்படி இவ்வீட்டுக்காரியிடம் அனுப்பியிருக்கிறேன்.

ஹேஸ்ட்:—வீட்டுக்காரியினிடமா!

மார்லோ:—வீட்டுக்காரியினிடந்தான்.

ஹேஸ்ட்:—கொடுத்துவிட்டாய்!

மார்லோ:—கொடுத்துவிட்டேன். நாம் கேட்கின்றபோது கொண்டுவரவேண்டியது அவள் பொறுப்பு, தெரியுமா?

ஹேஸ்ட்:—தெரியும், தெரியும்! சாக்ஷிகளுடன் கொண்டுவருவாள்.

மார்லோ:—நான் செய்தது சரிதானே? இந்த விஷயத்தில் நான் நிரம்ப புத்தி யோசனைகளுடன் நடந்திருக்கிறேன் என்பதை நீ மறுக்கமுடியாது.

ஹேஸ்ட்:—அதிலென்ன சந்தேகம். (ஒருபுறமாய்) என் மனக்கலக்கத்தை இவன் காணலாகாது.

மார்லோ:—இருந்தாலும், நீ ஏதோ சிறிது சஞ்சலப்படுவதாகத் தோன்றுகின்றதே. என்ன நேர்ந்தது?

ஹேஸ்ட்:—இல்லை, ஒன்றுமில்லை. என் ஜென்மத்தில் நான் இதைவிட உற்சாகமாக இருந்ததேயில்லை. நல்லது, நீ அவைகளை இவ்வீட்டுக்காரியினிடம் கொடுத்துவிட்டாய்; அவளும், சிறிதுகூடத் தடையில்லாமல் வாங்கிக்கொண்டாள்.

மார்லோ:—நிரம்ப ஆவலோடு வாங்கிக்கொண்டாளாம். நகைப்பெட்டியை வைத்துக்கொள்வது மல்லாமல், நான் அனுப்பின வேலைக்காரனைக்கூட நிறுத்திக்கொள்ள நினைத்தாளாம். எத்தனை கவனம் பார் அவளுக்கு! ஹ! ஹ! ஹ!

ஹேஸ்ட்:—ஹி! ஹி! ஹி! எப்படியும் பத்திரமாக இருக்கின்றன அந்த நகைகள்?

மார்லோ:—கருமிகையில் அகப்பட்ட காசுபோல.

ஹேஸ்ட்:—(ஒரு புறமாய்) பணத்துடன் புறப்படலாம் என்ற என் நம்பிக்கையெல்லாம் இவனால் பாழாயிற்று. இனி கையிலொன்று மில்லாமலேதான் போகவேண்டும். (மார்லோவைப் பார்த்து) நல்லது, மார்லோ, வேலைக்காரிச் சிறுமியை நினைத்து நினைத்து நீ தனியே மகிழ்ந்திருக்கும்படி உன்னை விட்டுச்செல்கிறேன். ஹி! ஹி! ஹி! என் காரியத்தைச் சாதித்து வைத்ததுபோல், உன் காரியத்தையும் சாதித்துக்கொள்வாய் என்று நம்புகிறேன்.

[ஹேஸ்டிங்ஸ் போகிறான்]

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[395-வது பக்கத் தொடர்ச்சி]

என்றன் கருத்தித வென்று னிராமன்

மாசறு தமனியவர் வாழும் வாழ்வுமோர் நிசாதகனை
களால் நீறு செய்து இந்திரனுடன் அமரர் ஏனை
யோர்தம் பொருமலைப் போக்குதற்கு உளங்கொண்ட
அம் மாயிரு ஞாலமுண்டோன் தான் தசரதன்மதலை
யாய்த் தாணியில் வருதருமவ் வேளையில்,

வானுளோ ரனைவரும் வான ரங்களாக்
கானினும் வரையினுங் கடித டத்தினுஞ்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென

ஆனனமலர்ந்து கலுழன்மேல் சரணம்வைத்தெழுந்த பின்றை, அங்குள்ள வானவர் உவகையோடு அதற்கிணங்கி, எண்கின் வேந்தன் தானென வியம்பிய பிதாமகனைத்தொடர்ந்து, மருவலர்க் கசனியன்ன வாலியும் மகனும் தன்கூறென்று இந்திரனும், அவனுக்குஇளையவன் தன்கூறென்று இரவியும், நீலன் தன் கூறென்று அக்கினியும், வாயு தன்கூறு அனுமன் என்றும், சிவபிரான், மற்றவ் வனுமனே தன்னுடைய கூறென்றும் இயம்பி, அன்னவாறே, மருள்தரு வனத்தின் மண்ணின் வானர ராகி வந்தார். எம்பெருமான் இயற்றுதற்கிசைந்த அக்கருமத்தின்கண் உதவிநிற்றற்கேஇவ்வமரர் மண்ணினிற் வானரங்களாய்ப் பிறந்து குழுமினர் எனக் கொள்ளல்வேண்டும். உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலாவிளையாட்டுடைய அவ் வொருதனிப்பரமன் ஒன்று புரியப்புகுங்கால் அதற்கு வேறோர் உதவியும் பிறப்பும் முயற்சியும் வேண்டுமோவென்ன வினவுவது முற்றிலும் வீணல்லாவிடினும், மிகப்பழைய இக்கேள்வி விடை யொன்று விளையமாட்டா விந்தையுட்டானே கலந்து கரைதற்குரியது. கோதண்டமொன்று போதுமே; மற்று, திருப்பாற்கடலின்கண் அறிதுயிலினிதமர்ந்தவாங்கே உள்ளத்திலோர் சங்கற்பம்

M211,N28KN
199176

கொள்ளலே சாலும். அச் சங்கல்பம்கூட மிகையோ எனச் சந்தேகிக்கும்படி "எம்பெருமான், இப்படைப் பழிப்பைச் சிந்தித்திடுவதும் இல்லை கண்டீர்" எனப் பிள்ளைப்பெருமாள்ஐயங்கார் சாற்றுகின்றார். அவ்வாறாக, இராவணனோடு அரக்கர்குலத்தை அழித்தற்குத் தான் ஏற்றுக்கொண்ட கருமத்தினிடையே அமரரை அரிகளாய்ப் பிறக்குமாறு அருளினன். அவர்களும் பிறந்தனர்; பிறந்து என்ன செய்தார்? வானரத் துணை வேண்டி நின்றான்போல் எம்மையாளுடைய நாயகன் நடித்த அந்நாடகத்தகவயின், சீதாபிராட்டி சிறைபுக்கிருந்த இடத்தினைத் தேடித்தந்ததும், இலங்கையை எரிக்கு இரையாக்கியதும், ஆழிக்கு அணையிட்டதும், போர்புரிந்ததும் அனைய சிற்சில செய்தனர் பிறர்பிறர். இந்திரன்றன் ஒரு கூறாகிய அங்கதன், ஆற்றிய எவையேயேனும், மறுகூறாகிய வாலி இராமனுக்குதவியாய் நின்றவா றெவ்வாறென்று சற்றேனுந் தெரிந்ததில்லை. மற்று, நின்றன னல னவன்; இராகவன் வெஞ்சரத்தினாற்பொன்றினன், அவ்வளவே. இருந்தவர் எது செய்யினும் செய்யாதொழியினும் இறந்த இவன் இராமனுக்குச் செய்த துணை எஞ்ஞான்றுஞ் செப்பலரிது. அதனினும் அரிது, இராமன் அவ்வாலியைக் கொல்லப்புகுந்த வகையினுக் கோர் காரணம் அமைதியுறக் காண்பதாம்.

'நின்குறை முடிப்பன்' என வுறுதிகூறிச் சுக்கிரீவனுடன் கிஷ்கிந்தையின் எல்லையை எய்தி,

> அவ்வி டத்தி ராம னீய மைத்து
> வாலி யானதோர்
> வெவ்வி டத்தின் வந்துபோர் விளைக்கு
> மேல்லை வேறுநின்
> றெவ்வி டத்து ணிந்த மைந்த தென்க
> ருத்தி தென்றனன்
> றெவ்வ டக்கும் வென்றி யானு நன்றி
> தென்று சிந்தியா.

[அங்கு இராமன், "நீ சென்று போருக்கழைத்து வாலியாகிய ஒரு கொடியவிஷத்துடனே யுத்தம்செய்யும்போது, நான் வேறாக மறைந்து நின்று அம்பு எய்வதாக, ஆலோசித்துத் துணிந்திருக்கும் இது என் கருத்து", என்றனன். பகைவனை எவ்வகையிலேனும் அடக்கவேண்டுமென்ற வெற்றியை விரும்பியிருக்கின்ற சுக்கிரீவனும் இதுவே தக்கதென்று சிந்தித்து]

முன் ஈசன்உண்ட அண்டமுழுதும் உண்டதென்னும்படி பேரோசைசெய்து ஆர்ப்பரித்தான். "வேறு நின்று எவ்விடத் துணிந்தமைந்த தென்கருத்து இது" என்றது இப்படலத்தைப் படர்த்துகின்ற உருளை மாத்திரமன்றி, இக்காவியத்திற்கே அச்சாணி அன்னதோர் சொல்லாகி நிற்கின்றது. "அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரக்கினத்தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ" என்று பின் வாலி இராமனைக்கேட்குமது அந்தரம்கோக்கில் இந்நாள்வரை நிரந்தரம் கேள்வியாகவே அமைகின்றதேயன்றி மனுநெறிக்கிணங்கிய உத்தரம் யாரும்உரைத்திலர். ஏனெனில், மனுநெறி இது கூறிற்றில்லை. ஆதலின் மனுநெறிக்கு மாறானதொன்றை, அறஞ்செய்த அறத்தானும், [illegible] தீவினை செய்த தீவினையினாலும், அவதரித்த [illegible] இயற்றினன் என்றியம்ப அவன்பால் பக்தி[illegible] யாவரும் உவந்து இயற்றலையே. மனுநெறி [illegible] வாலியைக் கொன்றதொரு செய்கை போதா[illegible]ராமபெல்லாம் பரி பவத்தால் பதறும்வண்ணம், இருவர் பொருதிடுங்கால் மறைந்துநின்று இடையே ஒரு பாணம் தொடுப்பவனுமாயினன். இராமன்பால் சிறந்த பக்தியுடைய பெருமக்கள், எத்துணை எத்துணை அமைதி இச்செய்கை நேரிதே என்று விளக்குவதற்கு முயன்று கூறினும், அவை அத்தனையும் அவர்தொண்டைக்கு இப்புறத்தினின்று வருகின்ற சொற்களேயாகிக் கழிந்துவிட, மற்று அவர் நெஞ்சிலோ, 'இந்தக் காரியம் இவ்விராமன் செய்யாமலிருந்திருந்தால் ஆகாதா' என்ற ஏக்கமே எஞ்சுகின்றதென்பதற்கு ஐயமில்லை. மனுநெறியுங் கடந்துவிட்ட வேறோர் நிரந்தரமான தருமம் உளதென்னும் உண்மையை இராமன் தன் பாணத்தினோடு வாலியின் அகன்ற மார்பினுள்உறவுற ஊட்டினன். தத்தம் இதயத்திலும் தனித்தனி அவ்விராமபாணம் தைத்திடாமலே, வாலியைப்படுத்த செய்தியின் மெய்ப்பயனை மக்கள் உணர்ந்தறிவாராயின் இவ்வுலகமடங்கலும்இல்லை உய்ந்தது, பிறிதொருஐயமில்லை. இராமன் வாலியையோ மறைந்து நின்று எய்தான், அதனின்றுமாபெரும் மறைபொருளொன்றன்றோ நம் ஆன்மாவை வந்து எய்துகின்றது. அப்பொருளிற்கு இலக்காவோமாயின், அதன்பிறகு, இராமனது செய்கைகண்டு கூசுவதும் ஏங்குவதும், அனைத்தும் வீண். 'இராமன் எற்றுக்கு இது செய்தான்' எனத் தளர்வது போக்கி, 'இது செய்திலானேல் பின் இவ்விராமாயணந்தான் எற்றுக்கு' எனத் துணிவதாகும். ஏனைய காரணங்களால் கம்பர் கவிசக்ரவர்த்தியாகலாம்; மற்று, இவ் வாலிவதையை நிகழ்த்தித் தந்தநீர்மையால், ~~ஓர் ஆன்மோபதேசத்தை~~ வேறெவரும் செய்திராதவோர் சிறப்புடன் செய்து, அன்றுதொட்டின்றுகாறும் ஊழிவரையிலும் உளதாகும் மக்கட்டொகுதிக்கு இணையிலா வொரு குருநாதராய் அமைந்திருக்கின்றார். கலங்கலில் காட்சி அப் புலவர்பெருமான்றன் மலரடி போற்றுதும். அன்னவர்க்கு இன்னதோர்செவ்வியும் நன்னினைவும் செய்தளித்தவரமுனி வான்மீகர்தம் இணையடி ஏத்துவோம். பாம்பின்கால் பாம்பிற்கே தெரியுமாறு, வித்தகர்மனத்தினை வித்தகரே அறிவார்.

நகர்துறந்து மெலிந்திருந்த சுக்கிரீவனைப் பரமபதநாதனாகிய இராமபிரான் தனக்கு நாதனாகக் கொண்டு தஞ்சம்புக நேர்ந்தது ஏன் என்ற ஐயம்அடங்கும்படி, "லோகநாத: சுக்ரீவம் நாதம் இச்சதி" என்றோர் திப்பிய வாசகத்தை இலக்குவனை இயம்பச் செய்தார் வான்மீகிமுனிவர். இதன் தத்துவத்தை முன்னர் விளக்கியுளோமாதலின் மீண்டு மீண்டுக் கூறல் மிகை. ஈசுவரன்சித்தம் இருந்தவாறு இது, என்பதல்லால் கடவுட்செய்கைக்கு வேறெந்தக்காரணமும் வேண்டாமையை அங்கு அவ்வண்ணம் அமைத்த வான்மீகரது கருத்தைக் கம்பர் தம் இருகரங்களாலும் ஏற்றுக்கொண்டு இங்கு இவ் வாலிவதையின் சார்பில் பயனுறப் பயில்கின்ற செவ்வியை மனத்துட்கொள்ளநினைப்பவர் பாக்கியம்பெரிது செய்துளார். அங்கு "லோகநாத: சுக்ரீவம் நாதம் இச்சதி" என்னவே, இராமபிரான் சுக்கிரீவனைத் தஞ்சமடைந்ததற்கு வான்மீகமுனிவர் அமைதியாய்க் குறித்ததைக் கம்பர் இடமும் தொழிலும் பெயர்த்தெடுத்து, அச்சுக்கிரீவனது தமையன்மீது இராமன் எய்ததோர் அம்பினோடு சார்த்திவிட்டார். வேறு நின்று எவ்விடத்துணிந்து அமைந்தது தன்கருத்து என்பதை விளம்பினனேயன்றி, அக்கருத்துத் தான்கொண்டதற்குக் காரணந்தான் யாதென்ற இராமன்தெரிவிக்க நினைக்காமையும், ஈசுவர இச்சையே அன்னது என்பதை நன்குபுலப்படுத்துகின்றது. வான்மீகத்தில், இராமன் மராமரங்களைத் துளைத்துத்தன் தோள்வலியாற்றலைத் தெரிவித்தபின்னர்ச் சுக்கிரீவனது வேண்டுகோட்கிணங்கி வாலியைவதைக்கஏகுமுன் இராமன், இலக்ஷ்மணனுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டே புறப்பட்டான் என்று கூறப்பெற்றிருக்கின்றது. வாலியின் கொலைக்கு இலக்குவன் ஒருப்பட்ட செய்தி தெரிகின்றதேயன்றி, மறைந்துநின்றுகொல்கின்ற சூழ்ச்சியையும் ஒவ்வினனோ வென்னும் ஐயத்திற்கு அந்நூலினுள் இடமுளது. சுக்கிரீவனுடன் கிஷ்கிந்தைக்குச்சென்ற இராமன் காட்டின்கண்ணுள்ள மரங்களினிடையில் மறைந்துநின்று, வாலியைப்போரிற்கழைக்குமாறு அவன் தம்பியை ஏவினன். இராமன் அம்மறைவிடத்திருந்தே எய்வானோ, அல்லது அவ்விருவரும் புரிகின்ற போரினிடைத் தானுந்தோன்றி அப்போரினைத் தானே ஏற்றுக்கொள்ள நினைத்தானோ என்பது முதலில் தெரிவதற்கில்லை. அது எவ்வாறாயினும், வாலியை வதைக்கப்புகுந்த அவ்வகை கிடைக்க, இந்தக் காரியமே இலக்குவன் மனத்தை அருவருக்கச் செய்ததென்பதைக் கம்பர் சிறிதுபின்னர்க் காட்டுங் குறிப்பு இவ்வாராய்ச்சியுள் மிகவும் முக்கியமானதொன்றும். அருவருத்த இவ்விளவலை இறுதியில் அமைதிகாட்டி வாலியை அடக்குகின்றான்போல்இந்நிகழ்ச்சி கம்பரால்நடத்தப்பெறுகின்றது. மற்று, அவ்வமைதியின் நேர்மை அதனை உரைத்தவன்றன் மனநிலையை முன்னிட்டு மதித்தற்பாலதாதலின், இலக்குவனது சம்மதத்தை இராமனுக்கு வாங்கித்தந்த முதனூலை மறுத்துக் கம்பர் அவன் ஒவ்வாமையை உணர்த்திய செய்தி இவ்வாராய்ச்சிக்குப் பயன்தரும். அது பின்னர்.

தன் தமையனது உயிரை ஊட்டுவான் ஓர் மறலியைக் கொணர்ந்து மறைவிடம் வைத்து முன்போந்த அவ் விரவிசிறுவன் செய்த பேரொலி, உறங்கியிருந்த வாலியின் திண்செவித் தொளைக்கண் சென்று சேர்ந்தது. சேர்தலும்,

> மாற்பெருங் கடகரி முழக்கம் வாளரி
> ஏற்பது செவித்தலத் தென்ன வோங்கிய
> ஆர்ப்பொலி கேட்டன னமளி மேலொரு
> பாற்கடல் கிடந்ததே யனைய பான்மையான்

[படுக்கையின்மீது ஒரு பாற்கடல் படுத்திருந்தது போன்ற தோற்றமுடையவனான வாலி, மதமயக்கங்கொண்ட பெரிய மதயானையின் முழக்கத்தை ஒரு கொடிய சிங்கம் தன் காதுகளில் ஏற்றுக்கொண்டதுபோல் அந்தச் சுக்கிரீவன்செய்த பேரொலியைச் செவியுற்றான்]

> உருத்தனன் பொரவெதிர்ந் திளவ லாற்றமை
> வரைத்தடந் தோளினன் மனத்தி னெண்ணினன்
> சிரித்தன னவ்வொலி திசையி னப்புறத்
> திரித்ததவ் வுலகமொ ரேழொ டேழுமே

[செவியுற்று, மலைபோன்ற பெரிய தோள்களையுடைய அவ்வாலி கோபித்தான். பிறகு, தன்னுடனெதிர்த்துத்தன் தம்பி சண்டைசெய்ய வந்திருப்பதை மனத்திலெண்ணிச் சிரித்தான். அச்சிரிப்பொலியானது, அவ்வுலகங்கள் பதினான்கையும் திக்குகளிலெல்லைக்கும்அப்பால்சிதறியோடும்படி செய்துவிட்டது]

> எழுந்தனன் வல்விரைந் திறுதி யூழியிற்
> கொழுந்திரைக்கடல்கிளர்ந்தனையகொள்கையான்
> அழுந்திய தக்கிரி யருகின் மால்வரை
> விழுந்தன தோள்புடை விசித்த காற்றினே

[கற்பத்தின் இறுதியில் செழிப்பான அலைகளையுடைய கடல் பொங்கி எழுந்ததுபோன்ற தோன்றுபவனாகி மிக விரைந்து எழுந்தான். அவன் எழுந்த அவ்வதிர்ச்சியால் கிஷ்கிந்தைமலையே அழுந்திவிட்டது. அவன் தோள்களை உதறிப் பக்கங்களில் எழுப்பிய காற்றினால்அருகிருந்த மலைகள் கவிழ்ந்துவிட்டன]

> போய்ப்பொடித் தனமயிர்ப் புறத்த வெம்பொறி
> காய்ப்பொடுற் றெழுவட கனலுங் கண்கெடத்
> தீப்பொடித் தனவிழி தேவர் நாட்டினு
> மீப்பொடித் தனபுகை யுயிர்ப்பு வீங்கவே

[கோபத்தினால் சிலிர்த்த மயிர்களில் வெவ்விய அனற்பொறிகள் எழுந்தன. ஊழியினிறுதியில் உக்கிரமுடன்எழுகின்றவடவைத்தீயும்காணமாட்டாமல்பார்வைகெடும்படி, வாலியின் கண்கள் கோபாக்கினியைச் சிதறின. அவன் பெருமூச்சு விட்டபோது எழுந்த புகைகள் தேவலோகத்தின்மீதும் சென்று கதுவின]

> கைக்கொடு கைத்தலம் புடைப்பக் காவலின்
> திக்கயங் களுமதச் செருக்குச் சிந்தின
> உக்கன வுருமின முலைந்த வும்பரு
> நெக்கன நெரிந்தன நின்ற குன்றமே

[அவன் கையோடு கைதட்ட, உலகத்தைத் தாங்கும் திக்குயானைகளும் பயங்கொண்டுமதச்செருக்குஒழிந்தன. இடிகளெல்லாம் உடைந்து உதிர்ந்துவிட்டன; மேலுலகங்கள் நடுங்கின; நிலைபெற்றமலைகளும் தளர்ந்து நொருங்கின]

> வந்தனென் வந்தனெ னென்ற வாசகம்
> இந்திரி முதற்றிசை யெட்டுங் கேட்டன
> சந்திரன் முதலிய தாரகைக் குழாஞ்
> சிந்தின மணிமுடி சிகரந் தீண்டவே

[இதோ வந்துவிட்டேன் வந்துவிட்டேன் என்று வாலி கூவிய சொற்கள் கிழக்கு முதலிய எட்டுத்திக்குக்களிலுங் கேட்டன. அவனது இரத்தினங்களிழைத்த கிரீடத்தின் உச்சி பட்டதனால், சந்திரனை முதல்வனாகவுடைய நக்ஷத்திரக் கூட்டங்கள் உதிர்ந்தன]

> வீசின காற்றின்வேர் பறிந்த வெற்பினம்
> ஆசையை யுற்றன வண்டப் பித்திகை
> பூசின வெண்மயிர் பொடித்த வெம்பொறி
> கூசின னந்தகன் குலைந்த தும்பரே

[அவன் நடந்தபோது வீசின காற்றினால் மலைக்கூட்டங்கள் வேரோடுபெறிக்கப்பட்டுத் திக்குக்களின்எல்லையிற் போய் விழுந்தன. அவன் வெண்மையான மயிர்கள் வீசிச் சிதறிய வெவ்விய கோபாக்கினியின் பொறிகள் அண்டகோளத்தின் சுவரில் படிந்தன; யமனும் கூசினான்; தேவலோகமே நடுங்கியது]

> கடித்தவா யெயிறுகு கனல்கள் கார்விசும்
> பிடித்தவா யுகுமுரு மினத்திற் சிந்தின
> தடித்தவீழ் வனவெனத் தகர்ந்து சிந்தின
> வடித்ததோள் வலயத்தின் வயங்கு காசரோ

[வாலி கோபத்தாற் பற்களைக் கடித்தபொழுது உதிர்ந்த கனற்பொறிகள் மேகங்களோடு கூடிய ஆகாயம்இடித்தபொழுதுவிழும் இடிகளின் கூட்டம்போலச் சிதறின. அவன் தோள்களைத் தட்டியபொழுது, அவனதுநேர்மையான வாகுவலயத்தில் விளங்குகின்ற இரத்தினங்கள் மின்னல்கள் விழுவதைப்போல நொருங்கிச் சிந்தின]

> ஞாலமு நாற்றிசைப் புனலு நாகரு
> மூலமு முற்றிட முடிவிற் றீக்குமக்
> காலமு மொத்தனன் கடலிற் றன்கடை
> ஆலமு மொத்தன னெவரு மஞ்சவே

[யாவரும் அஞ்சும்படி, பூமியும் நான்கு திக்கிலுமுள்ள கடல்களும் தேவலோகமும் பாதாளலோகமும், அனைத்திற்கும் ஆதிகாரணமான தத்துவங்களும், அழியும்படி உகக்கடையில்எல்லாவற்றையும் எரிக்கின்ற காலாக்கினியையும் ஒத்தனன்; முன்பு தான் கடைந்த கடலினின்று தோன்றிய விஷத்தையும் ஒத்தனன்]

பாற்கடல் கடைந்து தேவர்களுக்கு அமிர்தம் தந்தவர்களில் இவ்வாலியும் ஒருவன். கடைந்தெடுத்த அமருதில் சிறிது தான் பருகினனல்லன்; பருகுதல் வேண்டுமென்ற நினைவும் இவனுக்குத் தோன்றியதில்லை. தனக்கு ஆலமே கடைந்துகொண்டான் போலும். ஆதலின் அவ்வாலமே இவன் இன்று ஒத்தனன்.

மலர் வனம்

மாலையுங் காலையோ

உயிரனைய காதலரைப் பிரிந்திருந்த ஆயிழையார் மாலைக் காலத்திற் காற்றுமல் மருள்கின்ற தன்மையைப் புலவர் பெருமக்கள் எத்தனையோ பலர் பல்வேறு வகைகளிற் பாடியுளரேனும் அவையனைத்தும் ஒரு துலை நிற்க மறுதுலைக்கு நெய்தற் கலியின் பாக்கள் ஒன்றிரண்டு போதுமே. நண்பர்காள் நுஞ் செவியைச் சற்றே தந்துவைமின்:—

அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகனுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
இகன்மிகு நேமியா னிறம்போல விருள்வர
நிலவுக்காண் பதுபோல வணிமதி போதரக்
கண்பாயல் பெற்றபோற் கணைக்கா லலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச
முறுவல்கொள் பவைபோல்முகைபவிழ்பு புதனந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் திம்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாழ்கொளா
வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ றொடங்க வந்ததை
வாலிழை மகளி ருயிர்பொதி யவிழ்க்குங்
காலை யாவ தறியார்
மாலை யென்மனார் மயங்கி யோரே.

[இடமகன்ற இவ்வுலகத்தைத் தெரியக் காட்டுகின்ற தன்னுடைய பல கிரணங்களையே தனக்கு வாயாகக் கொண்டு பகற்காலத்தை விழுங்கினாற்போல அக்கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு சாய்கின்ற சூரியன் அத்தகிரியைச்சேர்வதனால், ஆற்றல் மிகுந்த சக்கிராயுதத்தை யுடைய திருமாலின் நிறம் போன்ற இருளானது குவித்து சூழ, அதனைத் தன் நிலவாலே ஓட்டித் தூரத்திவிட நேர்ந்ததுபோல அழகிய சந்திரனானது தோன்ற, கணவரைக்கூடித் துயில் பெற்ற கண்கள்போல் திரண்ட தண்டுகளையுடைய தாமரைமலர்கள் குவிய, தம்முடையபுகழினைப் பிறர்சொல்லக் கேட்ட சான்றோர்போல மரங்கள் தலைசாய்த்துத் துயில, பிரிந்த மகளிரின் நிலைகண்டு சிரிப்பனபோல் சிறுதூறுகள் முகைகள் மலர்ந்து விளங்க, சிறுமூங்கிற் குழல்போல வண்டுகள் இம்மென்று ஒலித்து இசைசெய்ய, பறவைகள் தம் குஞ்சுகளை நினைத்துக் கூடுசேர; பசுக்கள் தாம் தங்கும் ஊரிலுள்ள கன்றின்மேல் அமர்ந்த ஆசையோடு மன்றுகள் நிறையப் புகுந்திட, விலங்குகள் தாம் தங்குமிடம் சென்று சேர, அந்தணர் தாம் செய்யும் வந்தனைகளைச் செய்து அந்திக்காலத்தை எதிர்கொள்ள, மகளிர் செந்தீ விளக்கை ஏற்றத்தொடங்க, மாலையானது தான் வாழும்படி வந்திருக்கும் இதனை, மயங்கிய அறிவையுடையவர், ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்திருக்கின்ற மகளிரது உயிரை அதனைப் பொதிந்துநின்ற உடலினின்றும் போக்கும் காலத்தினது தன்மையை உடைமை அறியாராய், மாலைக்காலம் என்று ஒரு காலமாகக் கூறுகின்றார்களே,—என்று ஓர் தலைவி ஆற்றாளாய்த் தன் தோழிக்குக் கூறினாள்]

அறிவு கெட்டு நனி மயங்கியோரில் அத்தோழியும் ஒருத்தியாய் இத்தலைவிக்குத் தோன்றினா ளாயினும், அத்தோழி முதலாயினோர், கணவன் வந்தபின் இத்தலைவி துயர்தீர்ந்த தன்மையைக் கண்டு மகிழ்ந்தனர். எவ்வாறெனின்—

அருமைர்ந்த காட்சியா னறனெக்கா னயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பைபய
விருமைர்பு புலம்பூரக் கனைசுடர் கல்சேர
உரவுத்தகை மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
இரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறாஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலு முட்கவரு கடுமாலை;
மாலைநீ,
உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப்பொழுதின்
வெள்ளமானிறநோக்கிக்கணைதொடுக்குங்கொடியான்
லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ; [கண்
மாலைநீ,
ஈரமில் காதல ரிகந்தருளா விடனோக்கிப்
போர்தோலைந்திருந்தாரைப்பாடெள்ளிநகுவார்போ
லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ; [போ
மாலைநீ,
கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்
வெந்ததோர்புண்ணின்கண் வேல்கொண்டுநுழைப்பா
காய்ந்தவோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ [ன்போற்
எனவாங்கு,
இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
தனிகொ டுயர்தீரக் காதலர் துணைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே.

[அருள் இல்லாத பார்வையனாகி அறமுங் கருதாமல் நன்மையுஞ் செய்யாமல், எல்லாரும் அஞ்சி நடுங்கும்படி தன் காலத்தைப் பயன்படாமற் செலுத்தினவனுடைய மனதைப்போல், மெள்ள மெள்ள இருளாலே உலகம் நிறைந்து, கணவரைப் பிரிந்திருப்போர் தனிமை மேலிடும்படி செறிந்த கிரணங்களையுடைய சூரியன் அத்தகிரியைச் சேர, தன்னுடையவலிமை யழியும்படி வறுமையால் ஒருவனைச் சென்று யாசிப்பவனது நெஞ்சைப்போல மரங்களெல்லாம் முதலில் பொலிவழிந்து பிறகு இரப்பவரைக் கண்டவுடன் தான் இருக்கும் இடத்தைவிட்டு எழுந்து சென்று மறைந்துகொள்கின்ற லோபியினுடைய நெஞ்சம்போல இலைகள் குவிய, வருகின்ற மாலைப்பொழுதே! நீதான் நாலுதிக்கும் நடுங்குகின்ற ஊழிக்காலத்திலே எமனானவன் விளங்குகின்ற செவ்வானத்தின்கண் தோன்றிய நுதியையுடைய பிறையைத் தனக்குப் பல்லாகக்கொண்டு எல்லாவுயிர்களையும் ஒருசேரக் கொள்வதற்குச் சிரித்தது போன்ற பயத்தைச் செய்கின்ற கடிய மாலையாய் இருந்தாய்—இப்படி நீ, என் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டு போனவர் எனக்குத் துணையாகாத காலத்தில், வெள்ளத்தில் அகப்பட்டுக்கரையேறமாட்டாத ஒருவனது மார்பைப் பார்த்து அம்பைத்தொடுக்குங் கொடியவனைப்போல, அல்லலில் அழுந்தியிருந்தான் கையற்றுப்போகும்படிசெய்ய வந்தாயோ—இப்படி நீ, இரக்கமில்லாதகாதலர் விட்டுநீங்கி அருளாதிருந்த சமயம் பார்த்து, போரில் தோற்றிருந்தவர்களது இழிவைக் கண்டு சிரிப்பவர்போல, பொறுத்தற்கரியவருத்தமுற்றஎன்னைப் பின்னும் வருத்தஞ்செய்யவந்தாயோ—இப்படி நீ, என் பற்றுக்கோடாகியவர் என்வருத்தத்தைப் போக்காத சமயத்தில், வெந்த புண்ணினுள் வேல் சொருகுவார்போல், வெதும்புகின்ற காமநோயால் வருந்துகின்ற என்னைக் கலக்கங்காண வந்தாயோ—என்று தலைவி கூறிக் கூறிப் புலம்பும்படியாக, ஆற்றுதற்கு இடமில்லாமல் அலைக்கின்ற பொல்லாங்கே செய்யும் மாலைக்காலத்தாலே வெறுப்புக்கொண்ட வருத்தந் தீரும்படி காதலர் விரைந்து வருகையினால், அம்மாலை இராக்காலத்திடத்தே சென்றொளித்து, பகைவனால் மெலிவடைந்த காலத்தில், அப்பகைவனுக்கும் மேலாக வந்து அவனைப் போக்கி நின்று காத்து நடத்தும் நல்ல இறைவன் வந்து தோன்றக் கெட்டுப்போனாற்போல இல்லையாயிற்றென்று கண்டோர் கூறினர்]

மதுரைக் கோவை

[364-வது பக்கத் தொடர்ச்சி]

கற்பு.

I. மணவணி

நகரணிமி னென்றல்

கடம்பா டவிச்சொக்கர் கன்னிநன் னாட்டன்ன
கன்னிமணை
முடம்பா டணிமுர சார்க்கின்ற தாலமு
தூறுநிறை
குடம்பா ரியுமணி மாளிகைக் கோடியுங்
கோவைமுத்த
வடம்பா டலம்பு நெடுந்தோ ரணநடும்
வாசலிலே. 318.

எரிவலஞ் செய்யு மியல்புகண்டு தோழி யுரைத்தல்

கொத்தார மாலை முடிச்சொக்க நாயகர்
கூடல்சுற்று
மித்தா ரணியி லெவர்க்கெய்து மோதன்
னிறைவன்மலர்க்
கைத்தா மரைமங்கை காட்டா மரைதொடுங்
காட்சியிந்த
மைத்தா மரைமலர்க் குள்ளே குடிகொண்டு
வாழுவதே. 319.

உழையர் வாழ்த்து

விடம்பா வியகண்டர் வெள்ளிமன் றாளர்
வியனடஞ்செய்
கடம்பா டவியுள்ள காலமெல் லாமெய்க்
கலவியின்ப
முடம்பா மெனவு முயிரா மெனவு
மொளிருமுத்த
வடம்பாய் முலைவல்லி யுஞ்சிலைக் காளையும்
வாழியவே. 320.

நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி கூறல்

தலைநா ளிவர்தந்த பேரின்ப வாரிக்குந்
தண்ணளிக்கும்
விலைநா ணமருல கென்றிருந் தேன்சங்க
மெய்த்தமிழ்நூற்
கலைநா வலர்தம் பிரான்கடம் பாடவிக்
கன்னிமணை
முலைநாண் முயக்கின் விலைக்கினி யேது
மொழிவதுவே. 321.

மணவணி முற்றும்.

II. இல்லிருத்தல்

மணமனைச் சென்ற செவிலிக்குத் தோழி கூறல்

கொலைத்தலை மூவிலை வேற்சொக்க நாயகர்
கூடல்முற்ற
முலைத்தலை வல்லிகற் பேதுசொல் வேன்கனல்
முக்குளிக்கும்
உலைத்தலை வேல்விழி யாய்வட மீனு
மொதுங்கும்வெய்யோன்
மலைத்தலை செல்லிற் கடைத்தலை யாமண்ணல்
வாரணமே. 322.

மணமனைச் சென்ற செவிலி நற்றாய்க் குரைத்தல்

காயுங் கனல்மழு வார்கடம் பாடவிக்
கானவர்பொன்
மாயுந் துடியிடை வல்லிநல் லாயுன்
வயிற்றுதித்த
யாயுந் துணைவனு மென்போல் பவரு
மெழினகரு
நீயுந் தலைவனும் யானுமிவ் வூரு
நிகர்க்கு மன்றே. 323.

இருவர் காதலு மருவுத லுரைத்தல்

அலைப்பட்ட வாருதி மந்தா கினியிரண்
டாறியொன்றாய்த்
தலைப்பட் டதுதரம் போதும தோசடைக்
காடுசெந்தா
கலைப்பட்ட நாதர் கடம்பா டவியிடைக்
கைகலந்து
நிலைப்பட் டிவர்பெற்ற பேரின்ப வாரிக்கு
நீணிலத்தே. 324.

இல்லிருத்தல் முற்றும்.

III. மணச் சிறப்பு

கருப்பத் தமைதிகண்டு இறைமகிழ்தல்

மங்கைக் கழகு வளரா விலையிடை
வந்துகுலச்
சிங்கக் குழவி குடிகொண்ட தால்நறுந்
தேனொழுகுந்
தொங்கற் சடாடவி யார்சொக்கர் தாளைத்
தொழாரின்முகங்
கொங்கைக் களிறு கருகியுள் ளேபயங்
கொண்டனவே. 325

வெள்ளணி வியந்து கூறல்

அணிபூத்த கூட லபிஷேகர் சொக்க
ரசிருக்கும்
பணிபூத்த தாருக் கொருவிளக் காகப்
பசும்புனிற்றுப்
பிணிபூத்த சாய லொருபிடி நாகம்
பிறங்குசொக்கர்
மணிபூத்த தந்த மணியுல கேழும்
வழங்குவதே. 326.

மணச்சிறப்பு முற்றும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஜூல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ச்யாவனப்ராச மஹாப்ருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் 1 டபி. மேடிகேட்டட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ச்யாவனப்ராச
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பண்டங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199176

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

பெருங் குள்ளர்:—மாஸ்டர் கே. கோபாலராவுக்கு வயது 30 ஆகிறது. அவருடைய எடை 19 பவுண்டு தான். உயரம் 2 அடி 6 அங்குலம். உலகத்திலேயே தான்தான் குள்ளமானமனிதன் என்று கூறிக்கொள்ளுகின்றார். அவருடைய நடமாட்டங்களை இங்குத் திரளான ஜனங்கள் ஆச்சரியத்துடன் கவனித்துவருகிறார்கள். அவர் தமது சகோதரருடைய துவிச்சக்கர வண்டியின் பின்னுள்ள ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு உலக யாத்திரையாகப் புறப்பட்டிருக்கிறார். டில்லியில் இவ்வாறு துவிச்சக்கர வண்டியில் ஒருவர் பின்னால் மற்றொருவர் உட்கார்ந்து செல்ல அனுமதி கிடையாதாகையால் மாஸ்டர் ராவ் போலீசாரிடமிருந்து விசேஷ அனுமதி பெறுவதற்காகப் போலீஸ் சீனியர் சூபரின்டெண்டின் ஆபீசுக்குச் சென்று அதிவேகமாக மாடிப்படிகளைத் தாண்டிக் குதித்துச் சூபரின்டெண்டு முன்பாக ஆஜராகி ராணுவதோரணையில் சலாம் செய்தார். சூபரின்டெண்டும் உடனே அவருக்குவேண்டிய அனுமதியைக் கொடுத்தார். அதுமுதல் தமது சகோதரன் துவிச்சக்கர வண்டியில் மாஸ்டர் ராவ் ஏறிக்கொண்டு நகரைச் சுற்றி யடிக்கிறார். தாம் வைத்திருக்கும் அனுமதிச்சீட்டைப் பெருமையாகப் போலீஸ் கான்ஸ்டேபிள்களிடம் காட்டிக்கொண்டே போகிறார்.

* * *

பார்லிமெண்டு மெம்பர் அழுகை:—இங்கிலாந்து பார்லிமெண்டு மெம்பரான மிஸ்டர் ஓர்மிஸ்டன் என்பவர் தனது மோட்டார் வண்டியை மிக வேகமாக ஓட்டியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கிளாஸ்கோ ஷெரிப் கோர்ட்டில் 25 பவுன் அபராதம் விதிக்கப்பட்டார். அவர் தம்மைப் போலீசார் நடத்திய மரியாதையற்ற முறையைப் பற்றி நீதிஸ்தலத்தில் விவரித்தபொழுது மாலைமாலையாகக் கண்ணீர்விட்டு அழுதாராம். அவர் மனைவியும் மகளும் அவருக்கு ஆறுதல் கூறினார்களாம்.

* * *

மோட்டார்க் கொள்ளை:—அமெரிக்காவில் ப்ரூக்ளின் நகரில் ஒரு மோட்டார் லாரி பல பாங்கிகளிலிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு 4,57000டாலர்களுடன் பீரங்கி சகிதம் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது பத்துப்பன்னிரண்டு திருடர்கள் யந்திர பீரங்கிகளுடன் திடீரென்று வந்து அந்தலாரியைச் சூழ்ந்து 4,27000 டாலர்களை அடித்துக்கொண்டு மணிக்கு 70மைல் வீதம் போய்விட்டார்கள். அவர்களைக் கண்டால் சுட்டுவிடலாமென்று உத்தரவு ஏற்பட்டிருக்கிறது.

* * *

செத்தவன் துணைக்கு வந்தான்:—வடக்கு வங்காளத்தில் ஒரு பெருங்காட்டில் ஓர் ஐரோப்பியத் தோட்டக்காரரிடம் ஓர் பழைய நேபாள வேலையாள் இருந்தான். ஒரு சமயம் அவன் தனது எஜமானனை ஒரு சிறுத்தைப் புலியிடமிருந்து காப்பாற்றினான். அந்தத் தோட்டத்துரை ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்கு மோட்டார் சைக்கிலில் சென்றபொழுது இருட்டாய்விட்டது. வழி தெரியாமல் காட்டுக்குள் சிக்கிக்கொண்டார். அப்பொழுது திடீரென்று ஒருவன் வந்து தன்பின்னே வரச்சொன்னான். அவன் மேற்படி நேபாள வேலையாள்தான். துரை அவனுடனே தமது இருப்பிடம் போய்ச் சேர்ந்துவிட்டார். வேலையாளும் உடனே மறைந்துவிட்டான். பங்களாவில் விசாரித்ததில் மேற்படி வேலையாள் சில மணி நேரத்திற்குமுன் இறந்துபோய் விட்டானென்று தெரியவந்தது. இறந்த வேலையாளின் [illegible] வடிவமே துரையைக் காட்டிலே ஆபத்தில் வழிகாட்டிக் காப்பாற்றினதென்று தெரியவந்தது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனுமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the [illegible] N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)